# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஏப்ரல் - 2017
பருவம் 3 புனல் 31

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20

## சமூகநீதிக்கு எதிரான தரநிர்ணய அமைப்பு





# மகிழ் இல்லம் திறப்புவிழா





மதுரை தோழர்கள் மகிழ், நிர்மலா, பாபுகண்ணன் ஆகியோரது உழைப்பில் உருவான 'மகிழ் இல்ல'த்தின் திறப்புவிழா, கருந்திணைக்குடும்ப விழா இரண்டும் கடந்த 16.04.17 ஞாயிறு காலை 10 மணியளவில், மதுரை - நத்தம் சாலையில் உள்ள ஜெய்பாரத் சிட்டியில் நடைபெற்றது.

காட்டாறு இதழ் தொடங்கிய காலத்திற்குப் பிறகு, நாம் நடத்திய ஒன்றுகூடல்களில் கருத்துக்களைப் பேசுவது நிறுத்தப்பட்டுவிட்டது. முற்றிலும் கொண்டாட்டங்கள், பெண்களுக் கிடையே உரையாடல், தோழர்களுக்கிடையே மன உணர்வுகளைப் பகிர்தல், ஒருவருக்கொருவர் ஆலோசனைகள், நட்புப் பறிமாறல் என்ற ரீதியில்தான் நிகழ்வுகள் இருந்தன. பல நூற்றாண்டுகளாக - ஜாதிய உறவுகள் தக்கவைத்திருந்த இடத்தைக் கருந்திணை உறவுகள் கைப்பற்ற வேண்டும் எனத் திட்டமிட்டு இந்நிகழ்வுகளைத் தொடங்கினோம்.

மேடை போட்டு, மைக் வைத்து பல மணிநேரம் முழங்கிய விழாக்களைவிட, அவை இல்லாத இந்தக் கொண்டாட்டங்கள் நல்ல பலனைக் கொடுத்துள்ளன. வெறும் கட்சித் தோழர்கள் என்ற நிலையைக் கடந்து, நமது சொந்தங்கள் இவர்கள் தான் என்ற நம்பிக்கையை கருந்திணைக் குடும்பங்களின் தோழர்கள் அனைவரும் பெற்றுள்ளனர். இந்த நோக்கில், மதுரை மகிழ் இல்ல விழாவைத் திட்டமிட்டனர் மதுரை மகிழ் இல்லத் தோழர்கள்.



# காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**
எரிதழல்
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
சேயூர் செந்தில்குமார்

**சட்ட ஆலோசனைக்குழு:**
வழக்கறிஞர் கிருட்டிணக்குமார்
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரம் & விற்பனைத் தொடர்பு:**
சி. விஜயன் 94881 79109
ஜீவாநகர் குமார் 99944 77013
கடத்தூர் காந்தி 99428 76665

**ஆன்லைன் சந்தா - நன்கொடை:**
பெரியகுளம் குமரேசன் 99943 65133

**ஆண்டுக்கட்டணத் தொடர்பு:**
திருப்பூர் வேணி 77084 58086

**வடிவமைப்பு:**
முகிழ் மீடியா 97873 20044

**அச்சு:**
க்ரியேட்டிவ் க்ராஃபிக்ஸ், சென்னை

**உரிமை, வெளியீடு, ஆசிரியர்:**
சி.விஜயராகவன் 99762 56821

**பொறுப்பாசிரியர்:**
சி. இராவணன் 97868 89325






# இஸ்லாமும் திராவிடர் இயக்கமும்

இந்து, இஸ்லாமியர், கிறிஸ்தவர், புத்த மதத்தினர் என எந்த மதமாக இருந்தாலும், பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் போன்ற எந்தத் தத்துவமாக இருந்தாலும் - அந்த மதங்களையும், தத்துவங்களையும் பரப்பும் அமைப்புகள், இயக்கங்களாக இருந்தாலும் அவை பற்றி காலந்தோறும் விமர்சிப்பதையும், விவாதிப்பதையும் சமுதாய வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்கள் அனைவரும் வரவேற்கவே செய்வார்கள். விமர்சனங்களை ஏற்காத மதங்களும், அமைப்புகளும் காலப்போக்கில் அழிந்துவிடும். இது வரலாறு.

சிறுபான்மையினரோடு நமது அணுகுமுறை எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு, தோழர் பெரியாரின் அணுகுமுறைகளைத் தெரிந்துக்கொள்வது நல்லது. புத்தமதம் குறித்த விமர்சனங்களை புத்த மதச் சங்கத்தினர் அளித்த வரவேற்புக் கூட்டத்திலேயே முன்வைத்தார். சமரச சன்மார்க்க சங்கத்தையும் கூட அந்தச் சன்மார்க்க சங்கத்தினர் அளித்த பாராட்டு விழாவிலேயே கடுமையாக விமர்சித்துள்ளார். ‘இராமலிங்க சாமிகள் பாடல் திரட்டு’ என்று தனது குடி அரசு சார்பிலேயே நூல் வெளியிட்ட காலத்திலேயே, சன்மார்க்க சங்கத்தின் மீதான கடும் விமர்சனங்களையும் வைக்கிறார். அதுபோல, இஸ்லாம் மார்க்கத்தைப் பாராட்டும் விழாவிலேயே விமர்சனங்களையும் வைக்கிறார்.

“நான் இந்து மதத்தைப் பற்றியோ இஸ்லாம் மதத்தைப்பற்றியோ பேசுவது என்பதில் இரண்டு மதத்தினுடையவும் ஆதாரங்களை ஆராய்ச்சி செய்து பேசுவதாக யாரும் கருதிவிடாதீர்கள். அந்த வேலையை ஒரு பரிட்சை மாணவனுக்குக் கொடுத்து விடுங்கள். அதில் என்ன இருக்கின்றது என்பதில் எனக்குக் கவலையில்லை. பொதுவாகவே மதத்தின் தன்மையை ஏட்டில் என்ன இருக்கின்றது என்று பார்ப்பதில் பயனில்லை. அந்தந்த மதங்களில் மக்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள்? மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள்? அதனால் அந்தச் சமூகம் என்ன பலனடைந்திருக்கின்றது? என்பது போன்றவைகள்தான் மதத்தின் மேன்மையை அளக்கும் கருவியாகும். அப்படிப் பார்ப்போமே யானால் அநேக விஷயங்களில் இந்து மதத்தைவிட (கொள்கைகளைவிட) இஸ்லாம் மதமே (கொள்கைகளே) மேன்மையான தென்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

...ஒரு மனிதன்தான் மாலை 5-00 மணிக்கு இஸ்லாம் கொள்கையை ஏற்றுக் கொண்டதாய்ச் சொல்லி 5-30மணிக்கு ‘தீண்டாதவன்’ என்கின்ற இழிவிலிருந்து மீண்டு தெருவில் நடக்க உரிமை பெற்று மனிதனாவதில் ஏன் மற்றவர்கள் ஆட்சேபிக்க வேண்டும்? என்பது எனக்கு விளங்கவில்லை.”

என்று இஸ்லாம் மதத்தினைப் பாராட்டுகிறார். இன இழிவு நீங்க இஸ்லாமுக்கு மாறுங்கள் என்று அறிவிக்கிறார். அந்த இடத்திலேயே, அதே உரையிலேயே, இஸ்லாம் பற்றிய விமர்சனங் களையும் முன்வைக்கிறார்.

"நான் இஸ்லாம் சமூகக் கொள்கைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டதாகவோ அவைகள் எல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்று சொல்லுவ தாகவோ யாருந் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோத மான கொள்கைகளைப் பார்க்கிறேன். இந்து மார்க்கத்தில் எதை எதை குருட்டு நம்பிக்கை மூடப்பழக்கம் பாமரத்தன்மை என்கின்றோமோ அவைபோன்ற சில நடவடிக்கை இஸ்லாம் சமூகத்திலும் பலர் செய்து வருவதைப் பார்க்கின்றோம்.

சமாது வணக்கம் பூஜை நைவேத்தியம் முதலியவைகள் இஸ்லாம் சமூகத்திலும் இருக்கின்றன. மாரியம்மன் கொண்டாட்டம் போல் இஸ்லாம் சமூகத்திலும் அல்லாசாமி பண்டிகை நடக்கின்றது. மற்றும் நாகூர் முதலிய 'ஸ்தல விசேஷங்களும்' சந்தனக்கூடு தீமிதி முதலிய உற்சவங்களும் நடைபெறு கின்றன. இவைகள் குர்ஆனில் இருக்கின்றதா? இல்லையா? என்பது கேள்வியல்ல. சமூகத்தில் பிரத்தியட்சத்தில் நடக்கின்றதா? இல்லையா? என்பது தான் கேள்வி.

ஒரு சமயம் களை முளைத்தது போல் புதிதாக தோன்றினவை யாகவுமிருக்கலாம். சாவகாச தோஷத்தால் ஏற்பட்ட வைகளாகவும் இருக்கலாம். ஆனால் இவை கள் ஒழிக்கப்பட்ட பின்பு தான் எந்த சமூகமும் தங்களிடம் மூடக் கொள்கைகள் இல்லை என்று பெருமை பேசிக்கொள்ள முடியும்."

என்று, இஸ்லாமியர்களின் முக்கியமான விழாவிலேயே, அவர்களிடமே விமர்சனத்தையும் வைத்தார். இதில் குறிப்பிடத்தக்க வரலாற்றுச் செய்தி என்ன வென்றால், அப்படி, பெரியார் விமர்சித்த போது, அவர் இஸ்லாமியர்களை எதிர்க்கிறார் என்றோ, இஸ்லாமியர்களுக்கு எதிரி என்றோ, திராவிடர் இயக்க - சிறுபான்மையினர் ஒருங்கிணைப்பைக் குலைக்கிறார் என்றோ எவரும் குற்றம் சாட்டவில்லை. இஸ்லாமியர்கள் எவரும் அப்படிக் கருதவில்லை. அவரது விமர்சனங்களை ஏற்றுத் தங்களைத் திருத்திக் கொண்டுள்ளார்கள் என்பதற்கும் பெரியாரின் உரையே சான்று.

"ஆனால் ஒரு விசேஷம், சென்ற வருஷம் ஈரோடு அல்லாசாமிப் பண்டிகையைப் பற்றி ஈரோடு கூட்டத்தில் நான் கண்டித்துப் பேசினேன். எனது ஈரோடு முஸ்லீம் சகோதரர்கள் அதற்கு சிறிதும் கோபித்துக் கொள்ளாமல் வெட்கப்பட்டார்கள். அதன் பயன் இந்த வருஷம் அடியோடு அந்தப்பண்டிகை அங்கு நின்றுவிட்டது எனக்கு மிக சந்தோஷம். கோபித்துக் கொண்டிருந்தால் இந்த வருடமும் நடத்தி யிருப்பார்கள்."

*- 28.07.1931 ம் நாள் திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளத்தில் நடைபெற்ற முகமதுநபி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் தோழர் பெரியார் தலைமையேற்று ஆற்றிய உரை. குடி அரசு - 02.08.1931*

மேற்கண்ட உரையிலிருந்தும், இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் போன்ற மதங்களைக் குறித்து, தோழர் பெரியார் முன்வைத்த விமர்சனங் களிலிருந்தும், தோழமை நிறைந்த அணுகுமுறை களிலிருந்தும் - அவற்றை அந்தந்த மதத்தினர் எதிர்கொண்ட முறைகளில் இருந்தும் நமது தலைமுறை பாடம் கற்க வேண்டும். திராவிடர் இயக்கத் தோழர்களும், இஸ்லாமிய அமைப்புத் தோழர்களும் நமது கடந்த கால வரலாற்றை நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.

### பெரியாரின் ஏடுகளில் இஸ்லாமிய எழுத்தாளர்கள்

சுயமரியாதை இயக்கத்திலும், திராவிடர் கழகத்திலும் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள், (இஸ்லாமிலிருந்து வெளியேறிவர்கள்) பணியாற்றியுள்ளனர். தோழர் பெரியாரின் குடி அரசு, புரட்சி, பகுத்தறிவு ஏடுகளில் ஏராளமான இஸ்லாமிய எழுத்தாளர்கள் இஸ்லாம் மதம் குறித்த கடுமையான மாற்றுக் கருத்துக்களை எழுதி யுள்ளனர். இஸ்லாம் மதத்தில் நடக்க வேண்டிய மாற்றங்களைப் பற்றி மட்டுமல்லாமல், இந்து, கிறிஸ்தவ மதங்களையும் பற்றியும் கடும் விமர்சனங் களை இஸ்லாமிய எழுத்தாளர்கள் பெரியாரின் ஏடுகளில் எழுதியுள்ளனர்.

*✦ அ.மு.முகமத் காசிம் எழுதிய 'கர்ப்பத் தடையும் நபிகள் நாயகமும்' புரட்சி 24.12.34,*

*✦ கா.அப்துல் ஹமீத் எழுதிய, 'உண்மை சமத்துவம் எது?' புரட்சி 31.12.33,*

*✦ காதர்எழுதிய, 'மதக்கொடுமை' -புரட்சி 7.1.34,*

*✦ கொழும்பு டி.எம்.இப்ராஹிம் எழுதிய, 'மதவெறியால் சீரழியும் மனித சமூகம்'-புரட்சி 14.1.34,*

*✦ 'கொலை, களவு, விபச்சாரம், தற்கொலை நிகழ்வது ஏன்?' புரட்சி 1.4.30,*

*✦ 'கடவுளும் பகுத்தறிவும்' புரட்சி 22.4.34,*

*✦ அலி அக்பர் எழுதிய, 'கடவுளும், மதவாதிகளும்' புரட்சி 14.1.34,*

*✦ சு.பா.கு.மொஹிய்தீன் எழுதிய, 'இஸ்லாமும் ஏழை முஸ்லீம்களின் துயரமும்' புரட்சி 4.2.34,*

*✦ கொழும்பு ஏ.எல்.முகமத்தமீம் எழுதிய, 'மனித சமூக ஒற்றுமைக்கு மதம் முட்டுக் கட்டை' புரட்சி 11.2.34,*

*✦ 'மதம், மதம், இஸ்லாம் மதம்' புரட்சி 13.5.34, 'புரட்சியின் மூலமே இரட்சிப்பு' புரட்சி 20.5.34,*

*✦ எஸ்.சையது அகமது எழுதிய, ' ரூசோவின் சரித்திரம்', புரட்சி 18.2.34,*

*✦ அ.இ.ரஹ்மான் எழுதிய, 'இஸ்லாமும் சமதர்மமும்' புரட்சி 4.3.34,*

*✦ எஸ்.சையது அகமது எழுதிய, 'நாஸ்திக நாட்டு ஒழுக்கம்' புரட்சி 18.3.34,*

*✦ கொழும்பு எம்.கே.எம்.காதர் எழுதிய, 'சமதர்ம உலகைக்காண யுவர்காள் வம்மின்' புரட்சி 8.4.34,*

*✦ 'சமதர்மத்திற்குப் பெண்கள் விடுதலை அவசியம்' புரட்சி 15.4.34,*

✦ கே.அப்துல் ஜப்பார் எழுதிய, 'மனிதனின் பெருமையும், வறுமையும்' புரட்சி 13.5.34,

✦ ஈரோடு அப்துல்லா எழுதிய, 'கோஷா முறை' புரட்சி 25.3.34,

✦ டி.அப்துல் சுபஹான் எழுதிய 'நாகம்மாள் பாட்டு'

போன்ற இஸ்லாமிய எழுத்தாளர்களையும், அவர்கள் எழுதிய கட்டுரைகளையும் சான்றாகக் கூறகிறோம்.

மேற்கண்ட எழுத்தாளர்கள் தொடர்ச்சியாக, குடி அரசு, ரிவோல்ட், புரட்சி, பகுத்தறிவு ஆகிய பெரியாரின் அனைத்து ஏடுகளிலும் எழுதியுள்ளனர். தோழர் வீரமணி அவர்களின் பொறுப்பில் வெளியான விடுதலை, உண்மை ஆகிய ஏடுகளிலும் இஸ்லாமிய எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர். மாடர்ன் ரேசனலிஸ்ட் ஏட்டில் 1972 ம் ஆண்டு ஜனவரி இதழில், மாடர்ன் ரேசனலிஸ்ட் ஏட்டின் ஆசிரியர் தோழர் வீரமணி அவர்கள், 'வெல்ல முடியாத எல்லாம் வல்லவன்' என்ற தலைப்பில் பாகிஸ்தான் பிரதமராக இருந்த, யாஹியாகானின் பக்தி குறித்து தலையங்கம் தீட்டியுள்ளார்.

பெரியாரின் சுயமரியாதை இயக்கம் நடத்திய 'ரிவோல்ட்' ஆங்கில ஏடு குறித்து, அதன் சம காலத்தில் வெளியான மற்றொரு ஏடான *'The Young Liberator'* என்ற ஏடு எழுதியள்ள குறிப்பைப் பாருங்கள்.

> "நாத்திகக் கொள்கையின் சார்பாகவும், புரோகிதத் தன்மைக்கும், 'முல்லா' வியலுக்கும் எதிராகவும், ஆற்றல் நிரம்பிய கருத்துப்பரப்பலில் ரிவோல்ட் ஈடுபட்டுள்ளது."

இஸ்லாம் குறித்து பெரியார் விமர்சனங்களை முன்வைத்த காலத்தில், 'ஜியாசத்', 'அல் ஜமயத்' போன்ற உருது மொழியில் வெளியான இஸ்லாமிய ஏடுகள், பெரியாரின் சமுதாயப்புரட்சிப் பணிகளைப் பாராட்டி கட்டுரைகளை வெளியிட்டன.

**சிறுபான்மையினரின் எதிர்வினைகள்**

இஸ்லாம் மதம் மீது திராவிடர் இயக்கம் முன்வைத்த ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும், அவற்றை ஆரோக்கியமான முறையில் எதிர்கொண்ட இஸ்லாமிய அமைப்புகளையும் வரலாற்றில் காணலாம். சில நேரங்களில் சிறுபான்மை மக்களிடமிருந்து கடுமையான எதிர்வினைகளும் வந்துள்ளன.

அன்னை நாகம்மையார் மறைந்த நேரத்தில், மலேசியா நாட்டின் கெடா (கடாரம்) மாநிலத்தில் உள்ள சுங்கை படானியில் வாழ்ந்து வந்த தமிழர்கள் சார்பில், டி அப்துல் சுபஹான் என்ற சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த தோழர், ஒரு இரங்கல் கவிதை எழுதி அதை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அந்த இரங்கல் கவிதையை அச்சிட்டு, விநியோகிக் கக்கூடாது என்று கூறி, சுங்கை படானியில் வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் நீதிமன்றத்திலும், காவல்துறையிலும் வழக்குப் பதிவு செய்தனர். அதை எதிர்த்து வாதாடி மீண்டும் நாகம்மையாரின் இரங்கல் கவிதை மக்களிடையே பரப்பப்பட்டது.

தனது ஆயுதங்களான குடி அரசு, புரட்சி போன்ற ஏடுகளுக்குத் தடை வந்தது பற்றி, 'பகுத்தறிவு' இதழில், 'மதம் ஏன் ஒழிய வேண்டும்?' என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதியுள்ளார் தோழர் பெரியார்.

> "கிறிஸ்தவ மதத்தைப் பற்றி எழுதினோம் என்பதற்காகக் 'குடி அரசு' பத்திரிக்கை நிறுத்தப்பட்டுப் போயிற்று. மகம்மதிய மதத்தைப் பற்றி எழுதின தற்காகப் ' புரட்சி' பத்திரிக்கை நிறுப்பட்டுப் போயிற்று. இந்து மதத்தைப் பற்றி எழுதுகிறோம் என்பதற்காகத் தினந்தோறம், நிமிஷந்தோறும் அடைந்து வரும் தொல்லை கணக்கில் அடங்காது". - பகுத்தறிவு 9.9.1934

ஆம், பெரியாரின் ஆயுதங்களான 'குடி அரசு', 'புரட்சி' ஆகிய இரண்டு ஏடுகளுக்கும் தடை வந்ததே இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களை விமர்சித்து எழுதியதால் தான். அப்படி இருந்தும் பெரியார் ஒருபோதும் இஸ்லாமியர் களுக்காகவோ, கிறிஸ்தவர் களுக்காகவோ போராடுவதில் சிறிதும் பின்வாங்கவில்லை. அதேசமயம் இரண்டு மதங்களின் மூடநம்பிக்கைகளையும், அறிவுக்குப் பொருந்தாத பண்பாடுகளையும் விமர்சிப்பதை நிறுத்தவும் இல்லை.

**மலேசியாவில் பெரியாரும் இஸ்லாமியர்களும்**

பெரியார் 1929 லும் 1954 லும் மலேசியா சென்று, அங்குள்ள மக்களுக்காகப் பாடு பட்டுள்ளார். இரண்டு முறையும் கடும் எதிர்ப்பு களுக்கிடையே அவரை வரவேற்று, கிராமம் கிராமமாகப் பரப்புரை செய்ய அழைத்துச் சென்றவர்கள் மலேசியா வாழ் இஸ்லாமியத் தலைவர்கள் ஆவர்.

ரிவோல்ட் ஏடு 1928 லேயே தொடங்கப் பட்டது. தொடர்ச்சியாக இஸ்லாம் பற்றிய மாற்றுக்கருத்துக்கள் எழுதப்பட்டு வந்தன. இந்து மதம் குறித்து 90 சதவீத எதிர்வினைகள் இருந்தால், கிறிஸ்தவம், இஸ்லாம் குறித்து 10 சதமாவது தொடர்ந்து எழுதப்பட்டு வந்தது. அப்படி எழுதிக்கொண்டிருந்த காலத்தில் 1929 - 1930 ல் பெரியார் முதன்முறையாக மலேசியா செல்கிறார்.

அங்கிருந்த முக்கியப் பார்ப்பன ஏடான 'தமிழ்நேசன்' பெரியாரின் வருகைக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் பிரச்சாரங்களையும், சட்ட ரீதியான எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தது. அங்கிருந்த இந்து மத வெறியர்கள் பினாங்கு துறைமுகத்தில் பெரியார் கால்வைத்த உடனேயே, அவரைக் கொல்லவும் பலரை ஏற்பாடு செய்திருந்தனர். இந்து, கிஸ்தவ, இஸ்லாமிய மதங்களில் இருந்த மத வெறியர்கள் அனைவரும் ஒன்று போலவே எதிர்த்தனர்.

ஆனால், பினாங்கு துறைமுகத்திற்குப் பெரியார் சென்றடைந்தபோது, அவரை வரவேற்று நாடெங்கும் அழைத்துச் சென்ற குழுவில் முக்கியமானவர்கள் இஸ்லாமியர்கள் தான். மலேசிய

அய்க்கிய இந்திய அசோசியேசனின் தலைவர் ஹானரபிள் அப்துல் காதர், மிகப்பெரும் தொழிலதிபர் ஜனாப் மகமது ராவுத்தர், ஜனாப் ஆர்.கி.மகம்மது காசிம், இஸ்லாமிய சமூக அமைப்பின் தலைவர் சீனிராவுத்தர் ஆகியோர் அதில் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர்.

1940 க்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் மலேசியாவில் பெரியாரின் பிறந்தநாட்கள் கொண்டாடப் பட்டுள்ளன. அவற்றைத் தலைமை தாங்கி நடத்துபர்களில் இஸ்லாமியர்கள் முன்னின்றனர். சான்றாக, 22.9.1940 ல் பினாங்கில் பெரியார் பிறந்தநாள் விழா நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை வகித்தவர், பினாங்கு மாநில அரசின் இந்தியப் பிரதிநிதியாக, மிக உயர்ந்த பதவியில் இருந்த, ஹானரபிள் ஹெச்.ஹெச். அப்துல்காதிர் ஆவார்.

அந்த விழாவில், பெரியார் மலேசியா மக்களுக்கு ஆற்றிய பணிகள் பற்றி விளக்கவுரை நிகழ்த்தியவர் பனைகுளம் தமிழ்ப்பண்டிதர் எம். அப்துல் மஜீத் ஆவார். பெரியார், 1954 ல் மீண்டும் பினாங்கு சென்ற போதும், மலாக்காவில் ஒரு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதைச் செயல் படுத்தியவர் ஹாஜி எம்.என்.எம்.பிச்சை ஜே.பி ஆவார். பினாங்கு பகுதியில், இன்றைய 2017 காலகட்டத்திலும், மலேசியாவில் பெரியார் கருத்துக்களுக்கு ஆதரவாகவும், அதைப் பரப்பும் பணியிலும் முன்னணியில் இருப்பவர்கள் இஸ்லாமியர்களே ஆவர்.

**உறவுப்பாலம்**

இஸ்லாமியர்கள் மற்றும் அனைத்துச் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக, உறுதியாகக் குரல் கொடுத்தவர் பெரியார். அவரது சுயமரியாதை இயக்கமும், திராவிடர் கழகமும் அப்படித்தான் இயங்கின. ஆகவே, பெரியாரும், சுயமரியாதை இயக்கமும் வெளியிட்ட இஸ்லாமிய மத எதிர்ப்புக் கருத்துக்களை இஸ்லாமியர்கள் ஆரோக்கியமாக எதிர்கொண்டனர். பெரியார் நம்முடைய தலைவர். அவரது இயக்கம் நம்முடைய இயக்கம் என்ற மனநிலை இஸ்லாமியர்களிடம் இருந்தது.

பெரியார் காலத்திற்குப் பிறகு, தமிழ்நாட்டில் இந்துமதவெறி அமைப்புகளின் வளர்ச்சியானது, சிறுபான்மை மக்களின் வாழ்வாதாரங்களையும், எதிர்கால வாழ்வையும் கேள்விக்குறியாக்கியது. அந்தச் சூழலில், சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக, திராவிடர் இயக்கத்தினரும், பொதுவுடைமை இயக்கத்தினரும் துணை நின்றனர். ஆனாலும் இந்த இயக்கங்களின் செயல்பாடுகளின் மீது நம்பிக்கை இல்லாததால், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பல்வேறு இஸ்லாமிய அமைப்புகள் உருவாகின.

திராவிடர் இயக்கங்களும், பொதுவுடைமை இயக்கங்களும் இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் ஆதரவாகக் குரல்கொடுப் பதிலும், பாடுபடுவதிலும், அவர்களுக்கான உரிமைப் போராட்டங்களை முன்னெடுப்பதிலும் சிறிது பின் தங்கினாலும், அந்த மதச்சிறுபான்மையினரை எந்தச் சூழலிலும், எந்த இடத்திலும் எதிர்க்க வேண்டாம். அவர்களது மதங்களைக் கடுமையாக விமர்சிக்க வேண்டாம் என்ற இணக்கமான நிலையைக் கடைபிடித்தனர்.

எந்த இன, மத, வர்க்கத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும், அவர்களின் உரிமைகளுக்காகச் சமரசமின்றிக் குரல் கொடுப்பதும் - அவர்களின் விடுதலைக்குத் தடையாக அவர்களது மத உணர்வுகள், மன உணர்வுகள் எவை வந்தாலும் அவற்றையும் எதிர்த்து நிற்பது என்ற நிலைப்பாட்டிலும் பெரியார் தெளிவாக இருந்தார்.

ஆனால், நாம் தலைகீழான நிலைப்பாடு எடுத்தோம். எந்த மக்களாக இருந்தாலும் அவர்களுக்காக அடையாளப் போராட்டங்களை மட்டும் நடத்தினோம். அவர்களின் மத, மன உணர்வுகளைக் காயப்படுத்தி விடக் கூடாது என்ற தோழமை உணர்வில், அவர்களை இறுக்கமான மதவாதிகளாகவே தொடரச் செய்து விட்டோம்.

**இஸ்லாமிய அமைப்புகள் மட்டுமல்ல**

இஸ்லாம் மதத்தை மட்டுமல்ல. எந்த மதத்தையும், எந்த முற்போக்கு அமைப்பையும், எந்தப் பண்பாட்டையும், எந்த நடைமுறையையும், பழக்க வழக்கத்தையும் கேள்வி கேட்க வேண்டாம். சமுதாயம் ஓடும் திசையில் நாமும் ஓடிவிடலாம். சமுதாயம் ஓட வேண்டிய திசையைப் பற்றி நாம் அறிவுறுத்த வேண்டாம் என்ற நிலையை முற்போக்கு அமைப்புகள் கடைபிடிக்கின்றன.

தோழமை அமைப்புகள், கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் ஆகியவற்றில் முகத்தை நேருக்கு நேர் பார்க்க வேண்டுமே என்ற முகத்தாட்சண்யத்திலும் நமது அடையாளங் களை இழந்தோம். தங்களது சொந்த நட்பு, உறவு பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. அதனால் கூட்டுச் செயல்பாடுகள் சிக்கலாகி விடக்கூடாது என்பவற்றிற்காகக் ‘கொள்கை ரீதியாகக் கறாரான’ நிலைப்பாடுகளை எடுக்கத் தவறினோம். பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதில் நாம் எவரும் சளைத்தவர்கள் அல்ல. ஆனால், பெரியாரின் அணுகுமுறையை நாம் இன்னும் நெருங்கவில்லை என்பதே கசப்பான உண்மை.

இஸ்லாமிய அமைப்புகளை அணுகுவதில் மட்டுமல்ல. பிற்படுத்தப்பட்ட சமுதாய அமைப்புகள், தலித் அமைப்புகள், தமிழ்த்தேசிய அமைப்புகள், தமிழீழ விடுதலை ஆதரவு அமைப்புகள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, சுற்றுச்சூழல் அமைப்புகள், பொதுவுடைமை இயக்கங்கள், தொண்டு நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், தமிழ்ப் பண்பாடுகள், இந்துப் பண் பாடுகள் என எவற்றோடும் திராவிடர் இயக்கங் களின் அணுகுமுறை மாற வேண்டும்.

இந்து மதத்தின் மூடநம்பிக்கைகளையும், கொடுமைகளையும், இந்து மத அமைப்புகளின்

பயங்கர வாதங்களையும், எதிர்த்துப் பலமாகப் பரப்புரை செய்கிறோம். அதேசமயம் அந்த மதத்தை அறியாமல், பின்பற்றிவரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களின் உரிமைகளுக்காகச் சமரசமின்றிப் போராடுகிறோம்.

அதுபோல, இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற மதங்களின் மூடநம்பிக்கைகள் பெண்ணடிமைத் தனம் - அறிவுக்கும், நடைமுறைக்கும் பொருந்தாத மதக் கோட்பாடுகள், பண்பாடுகள் ஆகியவற்றை எதிர்த்துத் தயவு தாட்சண்யமின்றி எதிர்ப்பிரச் சாரங்களை மேற்கொள்ள வேண்டும். அதேசமயம் இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற மதங்களில் உள்ள மக்களின் உரிமைகளுக்காக உண்மையாகப் போராட வேண்டும்.

**இழப்புக்கள் போதும்**

இயற்கை உணவுப்பொருட்கள், சுதேசிப் பொருட்கள், ஆர்கானிக் உணவுகள், நாட்டு மாடு, இயற்கை விவசாயம், தடுப்பூசி எதிர்ப்பு, அலோபதி மருத்துவ எதிர்ப்பு, தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடுகள், இந்துப் பண்பாடுகள் என்பவை போன்ற பெயரில் அண்மைக்காலமான அரங்கேறி வரும் தமிழ், இந்து, சுற்றுச்சூழல் பாசிசப் போக்கு களுக்கு எதிராக வெளிப்படையாக எதிர்வினை யாற்ற வேண்டும்.

அப்படிப் பேசுவது தமிழ்த்தேசிய அமைப்பு களுக்கும், சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும், பொதுவுடைமை அமைப்புகளுக்கும் எதிராகப் போய்விடுமோ என்ற மனநிலையைக் கடந்து, தமிழர்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு இவை சரியா? தவறா? என்ற அடிப்படையில் நாம் எதிர்வினை களைத் தொடங்க வேண்டும். இல்லாவிட்டால் மேற்கண்ட கருத்துக்களைப் பேசும் அமைப்புகளும் இறுக்கமாகி, கெட்டி தட்டிப்போய், எதிர்காலத்தில் அவர்களாலும் நாம் சிலரை இழக்க வேண்டிவரும்.

அமைப்புகள் அதிகாரப்பூர்வமாக - வெளிப்படையாக பெரியாரியல் அடிப்படையில் நிலைப்பாடுகள் எடுப்பதைத் தவிர்க்கலாம். அதற்கான நியாயமான காரணங்கள்கூட இருக்கலாம். ஆனால் அமைப்புகளில் களத்தில் நிற்கும் தோழர்கள் சரியாக நிலைப்பாடு எடுக்க வேண்டிய கட்டாயச்சூழலில் உள்ளனர். இந்தச் சூழல் தான் நாம் பல தோழர்களை இழக்கக் காரண மாகிறது. இழப்பு என்றால் மரணம் மட்டுமல்ல.

நான் எந்த ஒரு அமைப்பையும் குற்றம் சாட்டுவதாக எவரும் கருதிவிட வேண்டாம். அப்படி வேறு யாராவது, எந்த திராவிடர் இயக்கத்தைக் குற்றம் சாட்டினாலும் அந்தக் குற்றத்தில் எனக்கும் பங்குண்டு என்பதைப் புரிந்து கொண்டுதான் எழுதியுள்ளேன். எழுதியபடி நடந்துகொள்ள முதலில், நான் முயற்சிக்கிறேன்.

**ஆதாரம்:**

*1.தோழர் அ.இறையன் அவர்களின் 'இதழாளர் பெரியார்' நூல்*

*2.குடி அரசு, புரட்சி, பகுத்தறிவு, ரிவோல்ட் ஏடுகள்.*

## திருப்பூர் மணிகண்டன் சிகிச்சை நிதி

காட்டாறு குழுவின் மிக முக்கிய செயல்வீரர், எம்.ஆர்.இராதா கலைக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் திருப்பூர் ஜீவா நகர் தோழர் மணிகண்டன் அவர்கள் கடந்த 29.03.17 அன்று காலை விபத்துக்குள்ளானார். அவரது இருசக்கர வாகனத்தில் ஒரு கார் மோதிவிட்டது. இடுப்பு, கால், மார்பு. நுரையீரல் பகுதிகளில் பலத்த காயமும், எலும்பு முறிவும் ஏற்பட்டு, உயிருக்குப் போராடும் நிலையில் திருப்பூர் ரேவதி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். உயிருக்கு ஆபத்து என்ற நிலையைத் தாண்டிவிட்டார்.

ஆனால், அடுத்தடுத்த அறுவைச்சிகிச்சை களுக்குத் தேவையான பணம் இல்லாததால், மருத்துவ மனை நிர்வாகம் அறுவைச்சிகிச்சைகளை நிறுத்தி வைத்தது. நமது தோழர்களின் உடனடி உதவியால் சிகிச்சைகள் முடிவடைந்து, 24.04.2017 ல் வீடு திரும்ப உள்ளார். சட்ட ரீதியான நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. இதுவரை ஏறத்தாழ 4 இலட்ச ரூபாய் செலவாகி உள்ளது. மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினாலும் அவர் முழுமையாக நலம் பெறுவதற்கு மேலும் 1 இலட்சம் தேவைப்படும்.

இரத்தச் சொந்தங்களைவிட நம்மைப் போன்ற கொள்கைச் சொந்தங்களே முக்கியம் என முடிவெடுத்து வாழ்பவர் தோழர் மணிகண்டன். நமது குடும்ப உறுப்பினரை நாம்தான் காப்பாற்ற வேண்டும்.

எனவே, கருந்திணைக் குடும்பத் தோழர்கள், காட்டாறு ஏட்டின் ஆதரவாளர்கள் அனைவரும் அவசரகாலச் செயல்பாடாகக் கருதி, ஒவ்வொருவரும் குறைந்தப்பட்சம் 1000 ரூபாய் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். அதிகப்பட்சமாக எவ்வளவு வேண்டு மானாலும் வழங்கலாம். நாம் சிறு கூட்டம்தான். இந்த ஆண்டுக்கான காட்டாறு இதழ் ஆண்டுக்கட்டணமும், நன்கொடையும் இப்போதுதான் திரட்டத் தொடங்கி யுள்ளோம். இந்த நேரத்தில் நமக்கு இது எதிர்பாராத சுமைதான். ஆனால் இதழே நடத்த இயலாமல் போனாலும் பரவாயில்லை. நமது தோழர் காப்பாற்றப்பட வேண்டும்.

பொள்ளாச்சி விஜயராகவன் அவர்களின் வங்கிக்கணக்கில் தொகையைச் செலுத்தி, அவருக்குத் தகவல் தெரிவியுங்கள்.

S.VIJAYARAGHAVAN,
INDIAN BANK,
MAIN BRANCH, POLLACHI
SB A/C 414853234,
IFSC: IDIB000P041,
Cell: 99762 56821
**தோழரின் தொடர்பு எண்:** 98940 69973

## செ.கேசவன்

# ஜாதி – மத வெறியர்களின் பிடியில் வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை






வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் முப்பதாவது ஆண்டு தமிழ் விழா மினசோட்டாவில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

விழாவுக்குரிய அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள பேரவையின் தலைவர், செயலாளர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் அடங்கிய வழிகாட்டுதல் குழுவும், நிகழ்ச்சி நிரல் குழுவும் அமைக்கப்பட்டது. அக்குழு சிறப்பு அழைப் பாளர்கள் முடிவுசெய்து, அதன் பிறகு விழாக்குழுவால், அந்தச் சிறப்பு அழைப்பாளர்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்ட பின்னர் வாக்கெடுப்பும் நடத்தப்பட்ட பிறகுதான் இறுதி செய்யப் பட்டுள்ளனர்.

இறுதி செய்யப்பட்ட சிறப்பு அழைப்பாளர் களுக்குத் தகவல் தெரிவித்து, அவர்களின் ஒப்புதலும் பெற்று, பேரவை செயலாளர் வாயிலாக அனைத்துச் சங்கங் களுக்கும், சமூக ஊடகம் வழியாக பொதுமக்களுக்கும் அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில், சிறப்பு அழைப்பாளராக அறிவிக்கப்பட்ட எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்கள் நீக்கப்பட வேண்டும் என்று நிர்வாகக் குழுவினர் உத்தரவிட்டுள்ளனர்.

“மாதொருபாகன்” என்ற நூலில் தங்கள் சாதியைத் தவறாகச் சித்தரித்துத் தங்கள் சாதியை “இழிவுப்படுத்திய ‘பெருமாள் முருகன்’ இந்த நிகழ்ச்சிக்கு வரக்கூடா தென்றும், மீறிவந்தால் அவர்மீது தனிநபர் தாக்குதல் நடத்துவோம்” என்று சில அறிவித்துள்ளனர். இதற்கு சில மூத்த உறுப்பினர்களின் அழுத்தமே காரணமாக உள்ளதாக அறிகிறோம்.

இது ஒரு தவறான முன்னுதாரணம் ஆகும். ஜாதி, மதம் கடந்து தமிழர்களாக இணைந்துள்ள நம்மிடையே ஜாதியை அடிப்படையாகக் கொண்டு, ஒரு ஜனநாயக விரோதச் செயலைத் தொடங்கி யுள்ளீர்கள். இப்படி ஒவ்வொரு ஜாதியைச் சேர்ந்தவர்களும் இதுபோன்ற நிலையை எடுக்கலாம். அந்நிலை உருவானால், வருங்காலத்தில் தமிழ் பேரவையின் ஆண்டு விழாவையே நடத்த இயலாத சூழலை அமைப்பின் நிர்வாகிகளே ஏற்படுத்திவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு பேரவை ஆளாகநேரிடும்.

### பகுத்தறிவாளர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் எதிரான தேவாரம்

எடுத்துக்காட்டாக, இதே 2017 ஆண்டு விழாவில், முனைவர் திரு. கோ. ப. நல்லசிவம் அவர்கள் பங்கேற்கிறார்கள். அவர் தேவாரம் உணர்த்தும் திருக்கோவில் வழிபாடு என்று ஆய்வுநூல் எழுதியவர். திருப்புகழ், திருமந்திரம் போன்றவற்றைப் பரப்புபவர். அதற்குரிய ஆய்வு களிலும் ஈடுபட்டவர். இதே வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையில் எத்தனையோ பகுத்தறிவாளர் கள் நிர்வாகிகளாகவும், உறுப்பினர்களாகவும் உள்ளனர். அவர்கள் எவருமே தேவாரம், திருவாசம் போன்ற பக்தி இலக்கியங்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இந்தத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், பெரிய புராணம் ஆகியவைகளைப்பற்றி, தோழர் பெரியார் பேசி, அவரது குடி அரசு, விடுதலை ஏடுகளில் வெளியான சில கருத்துக்களை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.

> “இந்து மதப்படி, மனுதர்ம சாஸ்திரப்படி நாம் எல்லாம் சூத்திரன்; அவன் பார்ப்பனன். அவன் உடம்பு மட்டும் அப்படி என்ன மணக்கிறது? நம் உடம்பில் மட்டும் நாற்றம் வீசுகிறதா? அவர்கள் சிறுநீர் பன்னீர் வாசனையும், நம் சிறுநீர் துர்நாற்றமும் வீசுகிறதா? இதைக் கேட்டால் நான் முகத்தில் பிறந்தேன்; நீங்கள் காலில் பிறந் தீர்கள்; என்று சொல்லுகிறார்கள்! புராணங்களை ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்தால் புண்ணியம் என்றும், மறுத்தால் பாபம் என்றும் தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் முதலியவைகளில் எழுதப்பட்டு இருக்கின்றன. உதாரணமாகப் பெரிய புராணத்தில் ஒரு பக்தன் தான் மோட்சம் செல்வதற்கு தன்னுடைய மனைவியை ஒரு பார்ப்பானுக்கு விட்டுக்கொடுத்து இருக்கிறான். இப்பொழுது இது மாதிரி யார் செய்வார்கள்? இம்மாதிரி எழுதிவைத்திருக்கிறாயே என்று கேட்டால் நாத்திகனா?”
>
> - பெரியார், விடுதலை 2.6.1956

> “நம் தேவலாயங்களை அழிக்க வேண்டும், நம் கோவில்களில் ஒரு பைசாகூடச் செலவு செய்யக் கூடாது, இராமாயணம், மகாபாரதம், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களை ஒழிக்கவேண்டும்.”
>
> -பெரியார், குடி அரசு -17.08.1930

தேவாரம், திருவாசங்கள் எல்லாமே பகுத்தறிவாளர்களையும், இஸ்லாமியர்களையும் கேவலமாகச் சித்தரித்திருப்பதால், தோழர் பெரியார் இந்த பக்தி இலக்கியங்களை அழிக்கச்சொல்கிறார். ஆனால், அவற்றைப் பரப்புவதையே வாழ்க்கை யாகக் கொண்ட முனைவர் நல்லசிவம் அவர்கள் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை விழாவில் பங்கேற்கக்கூடாது. அப்படிப் பங்கேற்றால் எதிர் வினை ஆற்றுவோம் என பகுத்தறிவாளர்கள் சார்பில் அறிவித்தால் அவரையும் சிறப்பு அழைப் பாளர் பட்டியலிலிருந்து நீக்க வேண்டி வரும்.

### ஆபாசக்களஞ்சியம் சிலப்பதிகாரம்

கடந்த சில ஆண்டுகளாக ஃபெட்னா நடத்திய சில நிகழ்வுகளும் முழுக்க முழுக்க பார்ப்பன ஆதிக்கப் பண்பாட்டையும், கவுண்டர் ஜாதியின் புகழ் பரப்பும் நிகழ்வுகளாகவே இருந்தன.

2014 ஆம் ஆண்டு செயின்ட் லூயிஸில் “சிலம்பின் கதை - தெருக்கூத்து” நடத்தப் பட்டது. அந்தச் சிலப்பதிகாரத்தைப்பற்றித் தோழர் பெரியார் ஏராளமாக எழுதியுள்ளார். அவற்றில் சில வரிகளை மட்டும் பாருங்கள்.

> “இன்று ஒரு சில புலவர்கள் சிலப்பதிகாரம் மிகப் பெரிய இலக்கியம் என்று அதைப் பிரசாரம் செய்து, அதனாலேயே தங்கள் வாழ்க்கையை வளர்த்து வருகின்றனர். அதில் என்ன இருக்கிறது? விபச்சாரத்தில் ஆரம்பித்து முட்டாள்தனத்தில் முடிவது தானே சிலப்பதிகாரம்? இதை எவரும் மறுக்க முடியாதே!”
>
> - பெரியார், விடுதலை 29.8.1964

இப்படி பெரியாரால் கடுமையாக எதிர்க்கப் பட்ட, சிலப்பதிகாரத்தைத் தெருக்கூத்தாக நடத்தினீர்கள். ஃபெட்னாவில் பல பெரியார் தொண்டர்கள் நிர்வாகிகளாக இருந்தாலும் மற்றவர் களின் கருத்துரிமைக்காக அக்கூத்துக் களுக்கு எதிராக எதிர்வினை ஆற்றவில்லை.

2013 ல் டொரண்டோவில் “தீரன் சின்னமலை வில்லுப்பாட்டு” நடத்தினீர்கள். அந்தத் தீரன் சின்னமலை இந்திய விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமல்ல. இன்று கவுண்டர் என்ற ஜாதியினரின் ஜாதி வெறிக்கு அடையாளமாகவும் இருப்பவர். பல தலித் இளைஞர்கள் படுகொலை செய்யப் படுவதற்குக் காரணமும் ஆனவர். மாவீரன் தீரன் சின்னமலைக் கவுண்டர்கள் பேரவை என்று ஒரு ஜாதி அமைப்பே தமிழ்நாட்டில் இயங்குகிறது. அதன் தலைவர் யுவராஜ் என்பவர், ஒரு தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர் கோகுல் ராஜைக் கொலை செய்து சிறையில் இருக்கிறார். அப்படிப்பட்ட ஜாதி வெறியர்களின் தலைவராகத் திகழும் தீரன் சின்னமலை அவர்களின் வரலாறு வில்லுப்பாட்டாக நடத்தப்பட்டது.

எல்லா வகையான ஜாதி வெறிகளுக்கும் எதிரானவர்கள் பேரவையில் நிர்வாகிகளாக இருக்கிறார்கள். அவர்கள் 2013 ல் இந்த வில்லுப்பாட்டை எதிர்க்கவில்லை. பக்குவத்துடன் இருந்தார்கள்.

### பெண்களை இழிவுபடுத்தும் இந்து மத சாஸ்திரங்களை என்ன செய்யலாம்?

தோழர் பெருமாள்முருகன் பெண்களைக் கொச்சைப்படுத்தி எழுதிவிட்டார் என அவரை அனுமதிக்க மறுக்கிறீர்கள். அப்படியானால், உண்மையாகவே இந்து மதத்தில் உள்ள அனைத்து ஜாதிப் பெண்களையும் கொச்சைப்படுத்தும், இந்து மத சாஸ்திரங்கள், புராணங்களை என்ன செய்யப் போகிறீர்கள்? எடுத்துக்காட்டாக மனுசாஸ்திரத்தில் இருந்து சில வரிகள்.

பிள்ளை இல்லாமல் ஒரு குலம் அழியுமானால், ஒரு பெண் தனது கணவனின் உடன் பிறந்த சகோதரர்கள் அல்லது தனது கணவனின் ஏழு தலைமுறைக்கு உட்பட்ட பங்காளிகள் யாருடன் வேண்டுமானாலும் கூடி பிள்ளைபெற்றுக் கொள்ளலாம்.

*-மனுசாஸ்திரம்:அத்தியாயம் 9, ஸ்லோகம் 59.*

கணவன் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டால் மனைவி வேறு ஒரு ஆணிடத்தில், தனது கணவன் சம்பாதித்த பொருளைக் கொடுத்து, பிள்ளையைப் பெற்றுக்கொள்ளலாம்.

*-மனுசாஸ்திரம்:அத்தியாயம்9,ஸ்லோகம்190.*

மனைவியில்லாத ஒருவன், பிள்ளையில்லாத ஒருவன், தனக்கு வாரிசு தேவைப்படுமானால், மற்றொருவனுடைய மனைவியிடம் பிள்ளை பெற்றுக்கொள்ளலாம்.

*-மனுசாஸ்திரம்: அத்தியாயம் 9,ஸ்லோகம் 52.*

### பெண்களை இழிவுபடுத்தும் மகாபாரதத்தை என்ன செய்யலாம்?

மகாபாரதக்கதைப்படி, பரசுராமன் தொடர்ச்சியாக 21 அஸ்திரங்களை எய்து, பூமியில் க்ஷத்திரியர்களே இல்லாமல் அழித்து விட்டார். அப்போது எல்லாத் தேசங்களி லிலும் உள்ள க்ஷத்திரியப் பெண்கள் அனைவரும், வேதங்களில் கரைகண்ட பிராமணர் களைக்கூடி, அவர்களோடு உறவு கொண்டு பிள்ளை களை உற்பத்தி செய்தார்கள். பரசுராமன் காலத்திற்குப் பிறகு வாழ்ந்த க்ஷத்திரியர்கள் அனைவரும் பிராமணனுக்குப் பிறந்தவர்களே என்றும், எல்லா தேசங்களிலும் இருந்த க்ஷத்திரிய ஜாதிப்பெண்கள் அனைவரும் பிராமணர்களுடன் உறவு கொண்டு தான் வாரிசுகளைப் பெற்றார்கள் என்றும் மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

*- மகாபாரதம்: ஆதிபர்வம், அத்தியாயம் 113.*

பெண்கள் ஆபத்துக்காலத்தில், தனது கணவன் அல்லாத மேல்ஜாதி ஆணிடத்திலோ, மைத்துன னிடத்திலோ பிள்ளை பெற்றுக்கொள்ளலாம்.

*- மகாபாரதம்: ஆதிபர்வம், அத்தியாயம் 126*

### பெண்களையும் ஆண்களையும் கொச்சைப்படுத்தும் பார்ப்பனப் பூணூல்

ஃபெட்னாவில் உள்ள சில பார்ப்பனர்கள் பூணூல் அணிந்திருக்கிறார்கள். அப்படிப் பூணூல் அணிவது, பூணூல் அணியாத மற்ற அனைத்து ஜாதியினரையும் ‘சூத்திரன்’ ( பார்ப்பனரின் வைப்பாட்டி மக்கள்) என்று அறிவிப்பது ஆகும். இந்திய அரசியல் சட்டத்தின் 372 வது பிரிவின் படியும், இந்து மத சாஸ்திரங்களின்படியும் இது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**சூத்திரன் என்றால் ஏழுவகைப்படும்.**

*1.போரில் புறங்காட்டி ஓடியவன்,*
*2.போரில் கைதியாகப் பிடிக்கப்பட்டவன்,*
*3.பிராமணனிடத்தில் பக்தியினால் ஊழியம் செய்பவன்,*
*4.விபச்சாரி மகன்,*
*5.விலைக்கு வாங்கப்பட்டவன்,*
*6.ஒருவனால் கொடுக்கப்பட்டவன்,*
*7. தலைமுறைதலைமுறையாக ஊழியம் செய்பவன்.*

*- மனுசாஸ்திரம், அத்தியாயம் 8, ஸ்லோகம் 415*

சட்டப்படியும் மேற்கண்ட சாஸ்திரப்படியும், பார்ப்பனர்கள் பூணூல் அணிவது என்பது, பார்ப்பனர் அல்லாத மற்ற ஜாதியினர் அனை வரையும், அனைத்து சமுதாயப் பெண்களையும் கொச்சைப்படுத்து ஆகும்.

கவுண்டர் என்ற ஒரு ஜாதியினரைக் கொச்சைப்படுத்துவதாகக் கூறி, பெருமாள் முருகன் புறக்கணிக்கப்பட்டால், அனைத்து ஜாதியினரையும் கொச்சைப்படுத்தும் பூணூல்களும் புறக்கணிக் கப்பட வேண்டும் என்று முழக்கம் எழுவதும் நியாயம் தானே?

### பெண்களைக் கொச்சைப்படுத்தும் இந்து மத அடையாளங்களைத் தவிர்ப்போம்!

ஃபெட்னா சார்பில் நடத்தப்படும் ஒவ்வொரு விழாவிலும் இந்து மத அடையாளங்களான குத்துவிளக்கு ஏற்றுதல், பட்டு வேட்டி, பட்டுச் சேலை, பூ, பொட்டு, திருநீறு, குங்குமம், பூணூல் போன்றவை தவறாமல் இடம்பெறுகின்றன. காவடி ஆட்டம், கும்மி அடித்தல், போன்றவையும் இடம் பெறுகின்றன.

கவுண்டர் ஜாதிப் பெண்களைக் கொச்சைப் படுத்தியதாகக்கூறி பெருமாள் முருகன் வரக்கூடாது என்றால், அனைத்து ஜாதிப்பெண்களையும் கொச்சைப்படுத்தியுள்ள மனுசாஸ்திரத்தையும், மகாபாரதத்தையும் ஃபெட்னா கொளுத்துமா?

அவ்வளவு தூரம் போக வேண்டாம். பெண்களைக் கொச்சைப்படுத்தும் இந்து மதத்தின் அடையாளங்கள் இனி எந்த ஃபெட்னா விழாவிலும் இடம்பெறக்கூடாது. அந்த அடையாளத்தோடு எவரும் விழா அரங்கிற்குள் நுழையக்கூடாது என்று அறிவிப்புச் செய்யுமா?

எந்த ஒரு குறிப்பிட்ட ஜாதியினரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்று ஃபெட்னா முடிவு செய்து, எழுத்தாளர் பெருமாள் முருகனைப் பங்கேற்க விடாமல் செய்தால், பகுத்தறிவாளர்களும், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்களும், ஜாதி-மத வெறிக்கு எதிரானவர்களும் ஒன்றிணைந்து 2017 பெட்னா விழா நாளில், விழா நடைபெறும் இடத்திலேயே ஜனநாயக வழியில் கடும் எதிர்வினை யாற்றுவோம் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறோம்.

எனவே, ஃபெட்னா விழாவுக்கு பூணூலை எவரும் அணிந்து கொண்டு வரக்கூடாது. பூணூல் அணிந்தவர்கள் விழா அரங்கிற்குள் நுழையக் கூடாது, இந்து மத அடையாளங்களோடு எவரும் விழா அரங்கிற்கு வரக்கூடாது என்பவை போன்ற முழக்கங்களையும், அமைதிவழிப் போராட்டத் தையும் முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு எங்களைத்தள்ள வேண்டாம் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.தோழர் பெருமாள் முருகனின் மீதான ஜாதிய அடக்கு முறையை எதிர்ப்போம்.



# மரண ஆவணம் பதிவு

மரணம் நமக்கு எப்போது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் நிகழலாம். அந்தச்சூழலுக்கான முன்ஏற்பாடுகளைத் திட்டமிட்டுக்கொள்வது பகுத்தறிவாளர்களுக்கு அழகு. வாழும் வரை ஜாதி, மதச்சடங்கு சம்பிரதாயங்களையும் மதப் பண்பாடு களையும் எதிர்த்து, மறுத்து வாழ்ந்து விடுகிறோம். இறந்த பிறகு நமது உயிரற்ற உடலுக்கு, நமது இரத்த உறவினர்களால் நடத்தப்படும் ஜாதி, மதச் சடங்கு களிலிருந்த நம்மைக் காப்பாற்றிக் கொள்வது மிக மிக அவசியமான பணி.

கழுத்தில் கத்தியை வைத்த நேரத்திலும், கொள்கைக்காக வீரமரணமடைந்தான் மாவீரன் ஃபாரூக். ஆனால் தனது இறுதிப் பயணத்தை மதச்சடங்குகளோடு - மதவாதிகளோடுதான் நிறைவு செய்தான். அந்நிலை இனி நாம் யாருக்கும் வரக் கூடாது. எதிர்பாரத ஒரு சூழலில் நடந்த வீரமரணம் அது. ஆனால், இயல்பாக முதுமையில் நோய்வாய்ப் பட்டு மரணமடையும் எண்ணற்ற தோழர்களுக்கும் இதுபோன்ற அவலநிலை நேர்ந்து விடுகிறது.

எவ்வித ஜாதி, மதச் சடங்குகளும் அற்ற முறையில் நமது இறுதி நிகழ்வுகளை நடத்திக் கொள்ளும் பொருட்டு, நமது விருப்பத்தை, மரண சாசனத்தை விருப்ப ஆவணமாக (Will Deed) உயிலாக, சார்பதிவாளர் அலுவல கத்தில் பதிவு செய்து வைத்தால், இறுதி நேரத்தில், உறவினர்களோ, பெற்றோர் களோ, நமது உடலுக்கு ஜாதி, மதச் சடங்குகள் செய்வதற்கு ஒரு தடையாக அது அமையும்.



80 களில் திராவிடர் கழக மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் இதுபோன்ற மரண சாசனங்கள் அச்சிட்டு விற்பனை செய்யப்பட்டதைப் பார்த்திருக்கிறோம். அந்த மரண சாசனங்களை வாங்கி, அதில் தங்களது படத்தை ஒட்டி, வீட்டில் மாட்டி வைத்திருக்கும் பெரியார் தொண்டர் களையும் பார்த்திருப்போம்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் முன்னணி அமைப்பான சுயமரியாதைக் கலை பண்பாட்டுக் கழகம் 2014 செப்டம்பர் 17 ல் இந்நிலைக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கையை ஒரு விழாவாகவே நடத்தியது. அப்போது அந்த விழாவை 'ஏற்பாடு' செய்த தோழர்கள் காட்டாறு குழுவாக இயங்கத் தொடங்கிய பிறகும், தொடர்ச்சியாக அந்தப் பதிவுப்பணியை மேற்கொண்டனர். தோழர் ஓவியா அவர்களின் புதியகுரல் அமைப்பும் இது போன்ற பதிவுகளுக்கு முயற்சி எடுத்தது.

இதுபோன்ற மரணசாசனப் பதிவை விருப்ப ஆவணமாக, (Will Deed) 'உயிலாக' எழுதி, அதை பதிவாளர் அலுவலகங்களில் பதிவுசெய்து, அந்தப் ஆவணத்தை ஃப்ரேம் செய்து வீட்டில் அலங்கார மாக வைக்க வேண்டும். நமது குடும்பத்தினர், நமது வீடுகளுக்கு வரும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நமது மரணநிகழ்வு பற்றிய ஒரு பரப்புரையாகவும், விழிப்புணர்வு ஊட்டும் பணியாகவும் இதைச் செய்ய வேண்டும். இதை ஒரு "பண்பாட்டுவிழா" வாக ஒவ்வொரு அமைப்பும் முன்னெடுப்பது மிக மிக அவசியமாகும். மரண உயில் மாதிரி Will Deed Draft தேவைப்படுவோர். காட்டாறு மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம். Kaattaaru2014@gmail.com



ஆர்.எஸ்.பிரபு

# அழிக்கப்படுவது கருவேல மரம் மட்டுமேல்ல; உயிரிச்சூழலும் தான்

ஜல்லிக்கட்டு நடத்தி நாட்டுப்பசுக்களை காப்பாற்றிய தன்னார்வலர்கள் தமிழரின் மரபுசார் விளையாட்டில் கலந்துகொண்டு ஆங்காங்கே இறந்துகிடக்கும் இளைஞர்களின் பிணத்தை எந்த சலனமும் இல்லாமல் தாண்டிச் சென்று, இன்று சீமைக்கருவேல மரத்தைப் பிடித்து ஆட்டிக் கொண்டுள்ளனர்.

சீமைக்கருவேல் தண்ணீரை ஏகத்துக்கும் உறிஞ்சி வறட்சியை உண்டாக்குகிறது என்பது எந்த அளவுக்கு உண்மையோ அந்த அளவுக்கு அதை அகற்றும் பணியில் நடைமுறை சிக்கல்கள் குறித்த எந்த புரிதலும் இல்லாமல் நடைபெற்று வரும் கூத்துகள்.

நீதிமன்றம் உத்தரவிட்டால்தான் தமிழகத்தில் எதுவுமே நடக்கும் என்ற ஒரு புதிய வகையான மக்களாட்சி முறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றாலும் அந்தந்த துறைசார் வல்லுனர்கள், அதிகாரிகள் என்ற இனம் அருகி தன்னார்வலர்களே மருத்துவர்களாக, நீரியல் நிபுணர்களாக, மண்வள வல்லுநர்களாகி விட்டனர்.

இன்றைய தேதியில் தமிழகத்தின் முக்கால்வாசி காட்டன் சைசிங் ஆலைகள், செங்கல் சூளைகள், அரிசி ஆலைகள், சின்னச்சின்ன தொழில் நிறுவனங்களின் பாய்லர்கள், கரியில் எரியும் தேநீர் அடுப்புகள், இஸ்திரி கடைகள் அனைத்துக்கும் இருக்கும் ஒரே எரிபொருள் சீமைக்கருவேல் மரம்தான். ஒரு கிலோ மூன்று முதல் நாலரை ரூபாய் மட்டுமே என்பதோடு மிகக்குறைந்த காற்று மாசுவை ஏற்படுத்தக்கூடிய எரிபொருள்.

இந்த விலை குறைவான firewood-க்கு மாற்று இல்லாததால் தமிழகத்தின் பல தொழில்கள் மிகப்பெரிய சரிவை சந்திக்கும். அதில் கடுமையாக பாதிக்கப்படப்போவது துணி சைசிங் தொழிலாகத் தான் இருக்கும். அரிசி ஆலைகளுக்காவது நெல் உமி உண்டு. மின்சாரத்தை நெருப்புக்கு மாற்றாக பயன்படுத்த த.நா.மி.வா (TNEB) இருக்கும் நிலையில் தமிழகத்தில் இன்னும் இருபது ஆண்டுகளுக்கு வாய்ப்பேயில்லை என்று தோன்றுகிறது.

ஆயில் மார்க்கெட்டிங் கம்பெனிகளிடம் மிகப்பெரிய அளவில் தேங்கியுள்ள Fuel oil எனப்படும் Furnace oil பெரும் மானியத்துடன் சந்தையில் இறக்கிவிடப்பட்டபோதிலும் சீண்டுவாரில்லாமல் கிடக்கிறது. இருக்கும் எரிபொருள்களிலேயே அதிகபட்ச (கிட்டத்தட்ட 4%) கந்தகத்தை மாசாக வெளியிடக்கூடியது. 25 டிகிரிக்கு குறைவான வெப்பநிலையில் உறைந்துவிடும் என்பதால் குளிர்காலத்தில் தொட்டியிலிருந்து உறிஞ்சுவதற்கு மின்சார வெப்பமூட்டி வேண்டுமென்பதால்தான் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியை பயன்படுத்தி வருகின்றன.

டெல்லியில் 2000 சிசி-க்கும் அதிக சக்தியுடைய டீசல் மகிழ்வுந்துகளைத் தடை செய்தபின்னரும் காற்று மாசு குறையாமல் இருப்பதன் காரணம் தெரியவில்லை; பக்கத்து மாவட்டங்களில் வைக்கோல் எரிக்கப்படுவதுதான் காரணம் என்று முட்டுக் கொடுக்கப்பட்டபோது தலைநகரத்தில் எத்தனை ஆலைகளில் நாள்தோறும் எத்தனை ஆயிரம் லிட்டர் ஃபர்னேஸ் ஆயில் எரிக்கப் படுகிறது, அதன் மானிய விழுக்காடு குறித்த தகவல்களை CSE-யின் சுனிதா நாராயண் வெளியிட்டி ருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தியா போன்ற வளரும் நாடுகளின் மாற்று எரிபொருள் தேவைகள் குறித்து பல மேலைநாட்டு தொழில் வர்த்தக சபைகள் அக்கறை காட்டி பேசி வரும் சூழலில் பெட்ரோலிய சுத்திகரிப்பின்போது ஃபர்னேஸ் ஆயிலுக்கு கொஞ்சம் மேலே நிற்கும் பெட் கோக் எனப்படும் Petroleum Coke-இன் அமெரிக்காவுக்கான இந்திய இறக்குமதி குறித்து சுனிதா நாராயண் ஆரம்பித்து வைத்திருக்கும் சர்ச்சைகள் முக்கியத்துவம் பெறுகிறது.

சிலநேரங்களில் CSE-யின் உட்டாலக்கடி டேட்டாக்கள் வாட்சப்பில் வருவதைவிட பயங்கர அபாயகரமானது என்பதையும் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். அப்படியெனில் தமிழகத்தின் மலிவான விறகு எரிபொருளை திட்டமிட்டு அழித்து மிக அதிக மாசைப் பரப்பும் ஃபர்னேஸ் ஆயிலை விற்க அமெரிக்க இலுமினாட்டிகள் செய்யும் சதியா என்ற சாதாரண வாட்சப் வாசகனின் கேள்விக்கு இப்போது என்னிடம் பதிலில்லை.

சரி, தமிழகத்தில் சீமைக்கருவேல் அனைத்தும் வேரோடு பிடுங்கி எரியப்பட்டுவிட்டதாக வைத்துக் கொள்வோம். அதன் உடனடி விளைவு வரும் மழைக் காலத்தில் என்னவாக இருக்கும்? வேரும், மரமும் விறகுக்காக எடுத்துச் செல்லப்பட்டபின் அதன் நுனிக்கிளைகள் அனைத்தும் அப்படியேதான் வீசப்பட்டிருக்கின்றன.

ஓர் உயிர்சூழலில் ஒரு மரத்தினை முற்றிலுமாக அகற்றும்போது அடுத்த வலுவான தாவர இனம் அந்த இடத்தை ஆக்கிரமித்துக்கொள்ளும் என்பது இயல்பு. ஆனால் கோடை ஆரம்பிக்கும் தருவாயில் அவற்றை அப்புறப்படுத்துகையில் கோடை முடிந்து அடுத்த மழை வரும்வரை அந்த இடம் கட்டாந்தரையாகவே கிடக்கும் என்பது தன்னார்வலர்களுக்கும் தெரியும். கன மழை வரும் போது மாற்று மரங்களோ, செடிகொடிகளோ இல்லாத நிலையில் ஏற்படப்போகும் கடுமையான மண் அரிப்பு, அதனால் மேல் மண்ணில் ஏற்படும் சத்துக்கள் இழப்பு, வெட்டி வீசப்பட்ட நுனிக் கிளைகள் நீர்வழிப் பாதைகளில் சென்று வாய்க் கால்களை, மதகுகளை அடைத்து அதனால் உண்டாகப்போகும் கரை உடைப்புகள், அதன் மேற்படி சேதம் எல்லாம் மனித திட்டமிடலில் உள்ள தவறால் நிகழக்கூடியவை.

நம் முன்னோர்கள் குளங்களை கோடையில் குடிமராமத்து செய்து அந்தந்த ஊர் மக்களே பாதுகாத்தனர் என்ற தகவலை வாட்சப் மூலம் அறிந்துகொண்ட தன்னார்வத் தமிழர்கள் குளங் களைப் பாதுகாக்க ஜேசிபி-யை வாடகைக்கு எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டனர்.

புற்கள், புதர்கள், செடிகொடிகள், சிறு மரங்கள், பெரிய மரங்கள், காய்ந்த சருகுகள் என அனைத்தும் சேர்ந்துதான் உயிர்ச்சூழல். ஏரி, குளம் என்றாலே ஊருக்கு நடுவில் தண்ணீரைத் தேக்கிவைக்கும் பெரிய மண்ணாலான தொட்டி என்ற புரிதலோடு ஜேசிபி-யுடன் நின்று போஸ் கொடுக்கும் குரூர மனங்கொண்ட அபார்ட் மென்ட்வாழ் தமிழர்கள் - சகமனிதர்களுடன் வாழப் பழகிவிட்டோம்..

கடும் மழைக்காலத்தையும், கோடை காலத்தையும் தாங்கித்தான் தேரை, நத்தை முதல் யானை வரை வாழ்கின்றன. ஒரு நிலத்தை அறுத்து எடுத்துவிட்டு எதைப் பாதுகாக்கப்போகிறோம் என்ற குற்ற உணர்வே இல்லாமல் வாழ வேண்டி யிருக்கிறது. பல வருட வண்டலை, குளங்களில் முற்றிலும் மண்தெரிய ஒரே ஆண்டில் தோண்டுவது தான் தூர்வாருதல் என்றால் களைக்கொல்லிகளைத் தெளித்துவிட்டு இரண்டு வாரங்கள் கழித்து தீ வைத்துவிடலாம். இரண்டும் ஒரேமாதிரியான விளைவுகளைத்தான் உண்டாக்கும் என்றாலும் பின்னது மிகவும் செலவு குறைவான ஒன்று. உயிரிச் சூழலாவது, வெங்காயமாவது.

திராவிட ஆட்சிகள்தான் தமிழகத்தின் இயற்கை வளங்களைச் சூறையாடிவிட்டன என்று இராஜஸ்தான் மார்பில்ஸ் பதிக்கப்பட்ட கக்கூஸில் அமர்ந்துகொண்டு பலர் தொடர்ந்து பதிவு எழுதி ஒருவகையான மனப்பிறழ்வுக்கு ஆளாகி வருவதையும் குறிப்பிட்டாகவேண்டும். திராவிடக் கட்சிகள் இல்லாத மாநிலங்களில் மார்பில்ஸ் என்பது ஜீரோ பட்ஜெட் விவசாயத்தில் மரத்தில் காய்க்கிறது, டைல்ஸ் எல்லாம் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாமல் நாட்டுக்கோமாதாவின் பாலி லிருந்து நெய் எடுப்பதுபோல லேசாக ஆப்பையை விட்டு கிளறி எடுக்கப்படுகிறது.



**கிளிமூக்கு அரக்கன்**
(2014 ஆம் ஆண்டு முகநூலில்
எழுதப்பட்டவை)

# விவசாய நிலங்களை அரசுடமையாக்கு! விவசாயிகளை அரசு ஊழியர்களாக்கு!

“கிளிமூக்கு அரக்கரே, காவிரியிலும் தண்ணீர் பருவம் தோறும் வருவதில்லை. தண்ணீர் பெற முயற்சிக்கும் முன்னாள் திமுக அரசாங்கத்தின் கடும் உழைப்புக்கு உச்ச நீதிமன்றம் சாதகமாகத் தீர்ப்பளித்தாலும் கர்நாடகம் தண்ணீர் தர மறுத்து, காவிரியையும் காவிரித்தாயையும் பிடித்து வைத்துக் கொண்டு இந்திய தேசியத்திற்கே (?!!) சவால் விடுகிறது. நாம் என்னதான் செய்வது?”

இதற்கான பதிலைச் சொல்வதற்குத் தயாரான நிலையில் தான் ‘கத்தி’ படம் வெளிவந்தது. தமிழ் நாஜிக்கள் ஆசிட் அடிப்பார்களா, பெட்ரோல் பாம் போட்டுவிடுவார்களா என்று பயந்து கொண்டே கத்தி படத்தைப் பார்த்து விமர்சனக் குறிப்பு ஒன்றை எழுதியிருந்தேன்.

“நீர்வரத்துக் கிடையாது. பயிர் செய்தால் இலாபம் என்பதே கிடையாது. இருந்தாலும் வறண்டு போன பூமியில் விவசாயத்தைக் கட்டிக் கொண்டு அழ வேண்டும் என்று சொல்லும் இயற்கை அவியல் விஞ்ஞானி அல்ல நான்.

தொழில்மயமாக்கம், பெரும் ஆலைகள் கட்டுதல் ஆகியனவற்றிற்கு நான் ஆதரவு. அப்புறம் சோற்றுக்கு என்ன செய்வீர்கள் என்று கேட்பீர்கள். தொழில்நுட்பம், உடை, கலாச்சாரம் எல்லா வற்றையும் இறக்குமதி செய்வதைப் போல உணவு வகைகளையும் இறக்குமதி செய்து கொள்வோம். எலிக்கறி சாப்பிட்டு ஏழை தமிழ் நாட்டு விவசாயி ஏன் சிரமப்பட்டு உங்களுக்கு சோறு போடவேண்டும்?

வருவாயைப் பெருக்கி ஆப்பிரிக்காவிலும் தென்அமரிக்காவிலும் நமக்குத் தேவையான விவசாய நிலங்களை கூட்டுறவு நிறுவனங்கள் அமைத்து வாங்கிப் போட்டுக் கொள்வோம். காடுகளை அழித்து விவாசாயம் பழகிய மாற்றத்தைப் போல இதுவும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுதான்”.

ஏசி ரூமில் *Farmville* விளையாடுபவர்களால் கடுமையான கண்டனத்திற்கு ஆளானேன். இதனிடையில் எனது ரசிகர் பத்ரி சேஷாத்ரி

“சிறு விவசாயிகளின் பிரச்னையே Subsistence Farming. அவர்களின் மிகச் சிறிய விவசாய நிலத்தில் கிடைக்கும் வருமானம் அவர்கள் உயிர் வாழப் போதுமானதல்ல. அவர்கள் விவசாயத்திலிருந்து வெளியேறுவதுதான் நல்லது” இப்படியான கருத்தை வேறு தெரிவித்து இருந்தார். வேதவிற் பன்னர்கள் சமயங்களில் தொலை நோக்குப் பார்வைக் கருத்துகளையும் சொல்வார்கள். இதன் சொன்னதன் நீட்சியாக எனது கருத்தை தொடர்ந்து படியுங்கள்.

ஒரு காலத்தில்... ஒரு காலத்தில் என்றால் சில பல ஆண்டுகளுக்கு முன்னர் அல்ல, சில பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே காடு வெட்டிப் போட்டு கடிய நிலம் திருத்தி, வேளாண் குடிகளாய் நம் டெல்டா மண்ணை விவசாய பூமியாய் ஆக்கினோம்.

நாம் கல்லணை கட்டி பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. மறவாதீர். அன்றைக்கு பொருளா தாரம் என்பது விவசாயத்தின் மூலம் மட்டுமே.

ஆகையால் பொருளாதாரத் தன்னிறைவு பெற்ற பூமியாய் இந்த மண் பத்தாது என்று இலங்கை, பர்மா, மலேசியா, இந்தோனோஷியா என்று கடல் கடந்து படையெடுத்துச் சென்றோம், வென்றோம்.

உங்களுக்கு இதில் சந்தேகம் இருந்தால் வழக்கமான உதாரணம் ஒன்று சொல்கிறேன். காசு இருக்கும் இடத்தில்தான் வேத விற்பன்னர்களும் இருப்பார்கள். சோழ மண்டலமாம் காவேரி டெல்டா மாவட்டங்களில் அக்ரஹாரங்கள் அதிகம் இருந்த காரணம் இப்போது புரிகிறதா? இப்போது எதற்கு சம்மந்தம் இல்லாமல் இந்தச் செய்தி என்று உங்கள் மனதில் தோன்றலாம்? சம்மந்தம் இருக்கின்றது?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாம் செய்த பொருளாதார வலிமையுள்ள செயலை, கடந்த சில பல பத்தாண்டுகளாக இப்போதுதான் கர்நாடகம் செய்யத் துவங்கியுள்ளது. ஏன் நமக்கு காவேரியில் முறையாக தண்ணீர் வருவதில்லை? அங்கு தண்ணீர் இல்லையா? நிச்சயம் போதுமான அளவிற்கு இருக்கிறது. ஆனால் கடந்த 50 ஆண்டுகளில் தனது பாசனப்பரப்பை அதாவது விளையும் பூமியை அதாவது காடு மண்டிக் கிடந்த இடங்களை கர்நாடகம் மூன்று நான்கு மடங்கு அதிகரித்து விட்டது.

கடந்த 50 ஆண்டுகளின் தரவுகளை ஆய்வு செய்யும்போது கர்நாடகத்தின் விளைச்சல் அளவு பல பல மடங்கு அதிகரித்துவிட்டது. இது போதா தென்று மேலும் சில அணைகளைக் கட்டத் திட்ட மிட்டு வருகின்றது. உச்சநீதிமன்றம் அதைத் தடுத்தாலும் ஏற்கனவே சுப்ரீம் கோர்ட்டுக்கு தீர்ப்புக்கு என்ன மரியாதை குடுத்ததோ அதைத்தான் குடுக்கும். இந்திய தேசியத்தை மதிக்க கர்நாடகா என்ன தமிழ்நாடா?

சரி, இனி என்னதான் நாம் செய்ய முடியும்? ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விவசாயம் மூலம் பொருளாதாரத்தை வலிமையாக்கிய பரம்பரை நாம்!! இப்போதும் அதுதான் வலிமை என்று நினைத்தால் நம்மைவிட முட்டாள்கள் யாரும் இருக்க முடியாது. இப்போது பொருளாதார வலிமை தொழிற்துறை நோக்கி நகர்ந்துவிட்டது. எனவே இனியும் விவசாய பூமி, என் பாட்டன் உழுத நிலம் என்று மூக்குச்சளி சிந்தி, சென்டிமென்ட் பார்க்காமல் அவைகளில் சைனா போல் பெரும் பெரும் தொழிற்சாலை பூமிகள் துவங்க திட்டமிடுவோம்.

அடேய் கிராதகா... கிளிமூக்கா... குடிக்க நீருக்கு என்ன செய்வது என்று திட்டுவது எனக்குக் கேட்கின்றது. பொறுமை பொறுமை. முறையாக மழை நீரைச் சேமித்து அவ்வப்போது வரும் காவிரி நீரை முறையாகத் தேக்கினாலே போதும்.. தமிழக மக்களின் குடிநீர் மற்றும் இன்ன பிற தண்ணீர்ப் பிரச்சனையை தீர்த்துவிடலாம்.

சரி, சோற்றுக்கு என்ன செய்வது? தனது பாசனப்பரப்பை அதிகரித்ததன் மூலம் கர்நாடகம் தன் மக்களின் தேவைக்கும் போக பல மடங்கு அதிகமாக உணவு உற்பத்தி செய்யத் துவங்கி விட்டது. அவர்களுக்கு தேவையானவற்றை நாம் உற்பத்தி செய்வோம். நீருக்கு பதிலாக நாம் அவர்களிடம் இருந்து நேரடியாக உணவைப் பெருவோம்.

சென்னை தனி நாடு என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். சென்னையில் விவசாயம் கிடையாது. இருந்தும் அனைத்தும் கிடைக்கின்றது. தேவை, தேவையை நிவர்த்தி செய்ய பொருளாதாரம் இருந்தால் எதையும் இறக்குமதி செய்யலாம்.

விவசாய பூமி நம் தாயைப் போன்றது, தாயைக் குத்தி குதறி இன்னபிற வன்முறை வாசகங்களைப் போட்டு வசனம் பேசலாம். ஆனால் காற்று வீசும் திசையில் ஓடத்தை செலுத்துவதுதான் புத்திசாலித் தனம் என்று உணர்ந்தவர்கள் வசனங்களுக்கு மயங்க மாட்டார்கள்.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு என் நிலங்களை விற்றுவிற்று என்னை பரதேசம் போகச் சொல்கின் றாயா பிரகஸ்பதி?

உங்கள் நிலங்களை தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கும் பொழுது உங்களுக்கு சாதகமான அம்சங்களை பேச்சு வார்த்தையில் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் மக்களுக்கான வேலை வாய்ப்புகளை உறுதி செய்யுங்கள். விலை போகாத வழக்கறிஞர்களை வைத்து உங்கள் இழப்பீடுகளை சரியான அளவில் பெற்று தொழிற் வளர்ச்சிக்கு உதவுங்கள்.

நாளையே , அற்புதமான தனிமம் உங்கள் டெல்டாவில் கிடைத்தால், யார் கண்டது கத்தி யின்றி ரத்தமின்றி தமிழர்களுக்கான நாடு கிடைக் கலாம். தொழில் வளர்சியடைந்த குடியரசானால் அடுத்த நிலை எதிர்காலத் தமிழகம் வல்லரசு தான். வாய்ப்புகள் கதவைத் தட்டும்பொழுது ஏற்றுக் கொள்வதே சமுதாயத்திற்கு நல்லது.

விவசாயம் தான் வேண்டும் என்று சிதம்பர நடனம் ஆடினால் , நிலங்களை நாட்டுடைமை யாக்கிவிட்டு விவசாயிகளை அரசு ஊழியர்கள் ஆக்கிவிடலாம் என்று அரசாங்கத்திற்கு கோரிக்கை வைப்போம்.



அதி அசுரன்




nirf

# சமூகநீதிக்கு எதிரான தரநிர்ணய அமைப்பு

இந்தியாவில் உள்ள கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியல் அண்மையில் வெளியானது. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள, *National Institutional Ranking Framework* என்ற அரசு நிறுவனம் இந்தியா முழுவதும் உள்ள கல்விநிறுவனங்களில் ஆய்வுசெய்து மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்விநிறுவனங்கள் அகில இந்திய அளவில் பல்வேறு பிரிவுகளின் கீழ் 37 முதன்மை இடங்களைப் பிடித்துள்ளன. திராவிட இயக்கங்களால் நாடு சீரழிந்து விட்டது என்று இந்துத்துவாவாதிகளும், தமிழ்த்தேசியர்களும் காலந்தோறும் நடத்திய பரப்புரையை இந்த ஆய்வு முறியடித்துவிட்டது என்று சமூகவலைத்தளங்களில் செய்திகள் பரவின.

தொழில்தொடர்பாகவோ, சுற்றுலாவாகவோ வடமாநிலங்களுக்கு நேரில் சென்று வந்தவர் களுக்கு தமிழ்நாட்டின் கல்வித்தரம், நிர்வாகச் சிறப்பு, தொழில் வளர்ச்சி, சுகாதார வளர்ச்சி ஆகியவை மிகச் சிறப்பாக இருப்பது நன்றாகப் புரியும். இதையெல்லாம் குழு போட்டு ஆய்வு நடத்தித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை.

## ஆய்வுகளின் போக்கு

இந்த ஆய்வுகளில் நமக்கு நம்பிக்கையில்லை. இப்படிப்பட்ட ஆய்வுகளை நடத்தும் அரசு அமைப்புகள் ஏற்கனவே பல உள்ளன. இந்தியக் கல்விநிறுவனங்களை உலகத்தரத்துக்கு உயர்த்த *National Board of Accreditation* NBA என்ற தரநிர்ணய அமைப்பு இயங்கி வருகிறது. ஒவ்வொரு கல்வி நிறுவனமும் இந்த என்.பி.ஏ அங்கீகாரம் பெறுவதற்குக் கடும் முயற்சிகள் செய்து வருகின்றன.

நாட்டில் என்ன நடந்தாலும் உடனே சி.பி.அய் விசாரணைக்கு உத்தரவிடு என்று போராடுகிறோம். சி.பி.அய். யில் நேர்மையானவர்கள் மட்டுமே இருப்பார்கள் என்று நம்புகிறோம். அதைப் போலவே, கல்வித்துறையில் என்.பி.ஏ. அங்கீகாரம் என்றால் அது மிகப்பெரும் உயர்ந்த அங்கீகாரமாகக் கருதப்படுகிறது.

ஒரு கல்விநிறுவனம் என்.பி.ஏ. எதிர்பார்க்கும் தரத்தில் உள்ளதா என ஆய்வு செய்யப்போகும் குழுவில் பெரும் பெரும் கல்வியாளர்கள் இருப்பார்கள். அவர்கள் கல்லூரிகளை ஆய்வு செய்யப் புறப்படும் முன்பே அந்தக்குழுவில் உள்ள அனைவரின் பலவீனங்களையும், கல்வி நிறுவன நிர்வாகிகள் ஆய்வுசெய்து கண்டுபிடித்து விடுவார்கள். பிறகு ஆய்வு எப்படி இருக்கும், அந்த ஆய்வின் முடிவு எப்படி இருக்கும் என விளக்க வேண்டியதில்லை. என்.பி.ஏ ஆய்வில் மட்டுமல்ல; ஏ.ஐ.சி.டி.இ, யு.ஜி.சி போன்ற அனைத்து அமைப்புகள் நடத்தும் ஆய்வுகளும் இதே நிலையில்தான் உள்ளன.

பெரும்பாலும் பொய்யான தகவல்கள், மிகைப்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்கள், போலியான ஆதாரங்கள் இவற்றைத்தான் கல்விநிறுவனங்கள் ஆய்வு அமைப்புகளுக்கு வழங்குகின்றன. அவர்கள் வழங்கும் தகவல்களின் உண்மைத்தன்மை பற்றி எந்த ஆய்வு அமைப்பும் எப்போதும் கேள்வி எழுப்புவதில்லை.

## கல்வி நிறுவன - ஆய்வு அமைப்புகளின் கூட்டு

ஒரு கல்லூரியில் பேராசிரியர் பணிக்கு பி.எச்.டி என்ற முனைவர் பட்ட ஆய்வை முடித்திருக்க வேண்டும். பி.எச்.டி முடித்தபிறகு 10 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும் என்பவை அடிப்படைத் தகுதிகளாக

உள்ளன. அப்படித் தகுதி வாய்ந்த பேராசிரியர்கள் பெரும்பாலான தனியார் கல்விநிறுவனங்களில் இருக்க மாட்டார்கள். ஒரு கல்லூரியில் கடந்த ஆண்டு பட்டப்படிப்பை முடித்த மாணவர் இந்த ஆண்டு அதே கல்லூரியில் பேராசிரியராக இருப்பார்.

ஆய்வுக்குச் செல்லும் அமைப்புகள் செல்லும் போது மட்டும் வேறு கல்லூரிகளில் பணியாற்றும் தகுதிவாய்ந்த பேராசிரியர்களின் பெயர்களையும், அவர்களின் சான்றிதழ்களையும் ஆய்வு நடக்கும் கல்லூரி பயன்படுத்திக்கொள்ளும். சான்றிதழ் களையும், நபர்களையும் ஒரே நேரத்தில் சரி பார்த்தால் பல நிறுவனங்களின் மோசடி தெரிய வரும். மேலும் ஆய்வு நடக்கும் போது மட்டும் தகுதிவாய்ந்த நபர்கள் சிலரை ஒப்பந்த அடிப் படையில் பேசி, அந்தக் கல்லூரியில் பணிபுரிவது போலக் காட்டுவதும் உண்டு. எல்லாம் ஆய்வுக் குழுவில் வரும் கல்வியாளர்களுக்கு நன்கு தெரியும்.

கல்விநிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் அமைப்புகள் பல விதிமுறைகள வைத்துள்ளன. கல்லூரியின் பரப்பளவு, அந்தப் பரப்பளவில் கட்டிடங்களின் பரப்பளவு, ஆய்வுக்கூடங்களின் எண்ணிக்கை, அவற்றின் பரப்பளவு எனத் தொடங்கி, கழிவறைகளின் நீள அகலம், அவற்றின் எண்ணிக்கை என்பது வரை பல்வேறு கடுமையான - சரியான விதிமுறைகள் உள்ளன. ஆனால் அந்த விதிமுறைகள் முறையாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய வரும் அதே அமைப்புகளின் பிரதிநிதிகள் அவற்றில் அக்கறை செலுத்துவதில்லை. அந்த விதிமுறைகளில் உள்ள சிறு சிறு ஓட்டைகளைப் பயன்படுத்தித்தான் தமிழ்நாட்டில் கல்வி வளருகிறது.

தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாட்டின் கல்விநிறுவனங்கள் பல்வேறு பிரிவுகளின்கீழ் 37 முதன்மை இடங்களைப் பிடித்திருப்பது மேற்கண்ட ஆய்வுகளைப் போலத்தான் நடந்திருக்கும் என்பது இதுபோன்ற ஆய்வுக்குழுக்களில் பங்கேற்ற கல்வியாளர்களுக்கும் தெரியும் - அடுத்த ஆண்டு இந்தத் தரவரிசையில் எப்படி இடம் பிடிப்பது என்பது கல்வித் தந்தைகளுக்கும் தெரியும்.

நேரடியாக நாம் பார்த்தோமானால் *National Institutional Ranking Framework* ன் தரவரிசைப் பட்டியலில் இடம் பிடித்த கல்விநிறுவனங்களைவிடச் சிறந்த பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன என்பதை அறியலாம். பொதுநல வழக்குப் போடுவது போல, ஏதாவது ஒரு இயக்கம், பொது நல ஆய்வாக கல்விநிறுவன ஆய்வை நடத்தினால் இந்த உண்மை உறுதியாகத் தெரிய வரும்.

### சமூகநீதிக்கு எதிரான ஆய்வு

இந்த ஆய்வில் கிடைத்த சில தகவல்கள் மிகப்பெரும் இயலாமையையும், ஏமாற்றத்தையும், கோபத்தையும்தான் கொடுத்துள்ளன.nirf வெளியிட்டுள்ள பட்டியலில், ஒவ்வொரு நிறுவனத்தைப் பற்றியும் விளக்கமாக பல தகவல்கள் உள்ளன. ஒவ்வொரு நிறுவனத்திலும் உள்ள பேராசிரியர்களின் மொத்த எண்ணிக்கை, அதில் பெண்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு நிறுவனத்தின் ஒட்டு மொத்த மாணவர் சேர்க்கை, அதில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடி யினரின் எண்ணிக்கை என பல தகவல்களும் இடம் பெற்றுள்ளன.

அதில் பெரும்பாலான கல்விநிறுவனங்களில் தமிழ்நாடு அரசின் 69 சதவிகித இடஒதுக்கீடு என்பது பின்பற்றப்படவே இல்லை. சில கல்லூரிகளில் முற்றிலுமாகவே இடஒதுக்கீடு பின்பற்றப் படாமல் 0 சதவிகிதமாகவே உள்ளன என்பது அதிர்ச்சியாக உள்ளது.

இடஒதுக்கீடு 0 சதவீதம் என்றால், முற்றிலும் பார்ப்பன உயர்ஜாதியினரை மட்டும் சேர்த்திருப் பார்களா என்றால், அப்படி இல்லை. இதே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களை **'பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீடு'** மற்றும் பணம் வாங்கிக்கொண்டு அனுமதி என்ற முறைகளில் மாணவர் சேர்க்கை நடந்துள்ளது.

பல நிறுவனங்களில் பொருளாதார ரீதியாக இடஒதுக்கீடு வழங்கப்படுள்ளதாக பட்டியலில் தகவல் உள்ளது. பொருளாதார ரீதியான இடஒதுக்கீடு பற்றி தனியாக ஒரு கணக்கெடுப்பையே என்.ஐ.ஆர்.எஃப் நடத்தியிருக்கிறது. மத்திய அரசு 'பொருளாதார ரீதியாக இடஒதுக்கீடு' என்பதைச் சட்டமாக்கி யுள்ளதா?அ ப்படி இல்லாவிட்டால் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு நிறுவனம் பொருளாதார ரீதியான இடஒதுக்கீடு பற்றி எதற்காகக் கணக்கெடுப்பு நடத்தியது? தனியார் கல்வி நிறுவனங்கள் எந்த சட்டத்தின் அடிப் படையில் அல்லது எந்த உத்தரவின் அடிப்படையில் பொருளாதார ரீதியான இடஒதுக்கீட்டைப் பின்பற்றினார்கள்?

சட்டப்படி இல்லாத பொருளாதார இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டுள்ளது. சட்டப்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஜாதிவாரி இடஒதுக்கீடு சில கல்லூரிகளில் 0 சதவிகிதமாகவும், சில கல்லூரிகளில் அரைகுறையாகவும் உள்ளது. ஆனாலும் அவற்றுக்கு இந்த NIRF நிறுவனம் தரவரிசையில் முக்கிய இடங்களை வழங்கியுள்ளது.

ஆக, மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை மறைமுகமாக நமக்குச் சொல்வது என்னவென்றால், "பொருளாதார அடிப்படையில் மாணவர் சேர்க்கையை நடத்திய கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் முதன்மை யான இடங்களைப் பெறும். ஜாதிவாரி இடஒதுக்கீடு என்பது தேவையில்லை. அதை நடை முறைப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லை" என்ற இரண்டு ஆபத்தான பார்ப்பனக் ஆதிக்கக் கருத்தை நமக்கு விதைத்துள்ளன.

தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் அண்ணா பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம், வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்றவை ஜாதிவாரி இடஒதுக்கீட்டைப் பின்பற்றியுள்ளன. ஆனால் பெரும்பாலான தனியார்

கல்லூரிகள், தனியார் தன்னாட்சிக் கல்லூரிகள், வேலூர் வி.ஐ.டி, சென்னை எஸ். ஆர்.எம், தஞ்சை சாஸ்த்ரா போன்ற தனியார் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் தமிழ்நாட்டின் அடையாளமான சமூகநீதிக்கொள்கைக்கு முற்றிலும் எதிராக உள்ளன என்பதை இந்த ஆய்வு உறுதிப்படுத்துகிறது.

**அரசுகள் – நிறுவனங்கள் – உச்சநீதிமன்ற வலைப்பின்னல்**

தனியார் பல்கலைக்கழகங்கள், தனியார் சுயநிதிக் கல்லூரிகள், சுயநிதிப் படிப்புகள் என்பவற்றில் 50 சதவிகித இடங்களை மட்டுமே அரசின் ஒற்றைச்சாரளமுறைக்குக் கொடுத்திருப் பார்கள். மீதம் உள்ள 50 சதவிகித இடங்களை தனியார் கல்வித்தந்தைகள் தாங்களே நிரப்பிக் கொள்வார்கள். அதில் எந்த இடஒதுக்கீடும் பின் பற்றப்படமாட்டாது. இது அரசின் தவறான முடிவு.

ஒரு பொறியியல் கல்லூரியில் சிவில் பாடப்பிரிவில் 40 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றால், அதில் 20 மாணவர்களை தனியார் கல்லூரி நிர்வாகமே நிரப்பிக்கொள்ளும். மீதமுள்ள 20 இடங்களில் 69 சதவிகித இடஒதுக்கீடு பின்பற்றப்படும். சாஸ்த்ரா, வி.ஐ.டி, எஸ்.ஆர்.எம் போன்ற தனியார் பல்கலைக்கழகங்களில், ஒரு பாடப்பிரிவுக்கு 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்வதாக இருந்தால் அந்த 40 இடத்தையுமே அந்தத் தனியார் நிறுவனங்களே நிரப்பிக்கொள்ளும் நிலைதான் உள்ளது.

அனைத்துக் கல்விநிறுவனங்களிலும், அனைத்து இடங்களையும் அரசே நிரப்ப வேண்டுமே ஒழிய, தனியாரிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்தது மிகப்பெரும் தவறு. இந்த முடிவுதான் கட்டணக் கொள்ளைக்குக் கதவைத் திறந்துள்ளது.

கல்வி வணிகமயமாக்கப்பட்டதற்கும் - ஜாதிவாரி இடஒதுக்கீடு பின்பற்றப்படாமல் இருப்பதற்கும் பின்னணியில் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளும் உள்ளன என்பதை பேராசிரியர் தோழர் இளங்கோவன் அவர்கள் ‘தலித் முரசு’ ஏட்டில் விளக்கியுள்ளார். அதாவது,

“டி.எம்.ஏ பாய் பவுண்டேஷன் - எதிர் - கர்நாடக அரசு (2003)) வழக்கில், பதினோறு நீதிபதிகள் கொண்ட அமர்வு, கல்வியை வர்த்தகப் பொருளாக, அதாவது கல்வி நிறுவனங்களை நிறுவி நிர்வகிப்பது அரசமைப்புச் சட்டப்பிரிவு 19(1)(ப)இன்படி வாணிபம் செய்யும் அடிப்படை உரிமை எனத் தீர்ப்புரைத்தது. இத்தீர்ப்பின்படி அரசு உதவி / மானியம் பெறாத எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் செயல்பாட்டிலும், அரசு தலையிட முடியாது.

இக்கல்வி நிறுவனங்களில் இனவாரி இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தவோ, அரசு இடங்கள் இவை எனவோ எதையும் கோர முடியாது. இத்தீர்ப்புரை கல்வி வாணிபத்தை அங்கீகரித்தது மட்டுமின்றி, கல்வி தருவது அரசின் கடமை என்ற நிலையையும் மாற்றியமைத்தது. அரசும் கல்வி தரும் தன் அடிப்படைப் பொறுப்பிலிருந்து விலகி இத்தீர்ப்புரைக்கு ஆதரவாக இருந்தது.

மோசமான விளைவுகளுக்குக் காரணமான இத்தீர்ப்புரை பற்றி எந்த ஓர் அரசியல் கட்சியும், சமூக நீதி இயக்கமும் இன்றுவரை வாய் திறக்கவில்லை. மக்களுக்கு கல்வி தரும் பெரும் பொறுப்பைப் பற்றி கடந்த 16 ஆண்டுகளாக கவலையற்றவர்களாகவே இவர்கள் உள்ளனர். டி.எம்.ஏ. பாய் பவுண்டேஷன் - எதிர் - கர்நாடகா அரசு வழக்கின் தீர்ப்பே 2002ஆம் ஆண்டு முதல் புற்றீசல் போன்ற சுயநிதி பொறியியல், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்வி நிறுவனங்கள் தோன்ற முதன்மைக் காரணமாகி இருக்கிறது.

டி.எம்.ஏ. பாய் வழக்கினைத் தொடர்ந்து இஸ்லாமிக் அகாடமி ஆப் எஜுகேஷன் - எதிர் - கர்நாடக அரசு வழக்கில் (2003), அய்ந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு, சுயநிதிக்கல்வி நிறுவனங்களில் அரசு இட ஒதுக்கீட்டிற்கான சட்டம் இயற்றும்வரை ஏற்கனவே நடைமுறையில் இருந்த இனவாரி இட ஒதுக்கீடு தொடரலாம் என தீர்ப்புரைத்தது. இந்தத் தீர்ப்புரையைத் தொடர்ந்து பி.ஏ. இனாம்தார் - எதிர் - மகாராட்டிரா வழக்கில், சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு என்ற பேச்சுக்கே இடமில்லை என ஏழு நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசமைப்பு அமர்வு தீர்ப்புரைத்தது. இதன் மூலம் நாடெங்கிலும் உள்ள சுயநிதி மருத்துவம் மற்றும் பொறியியல், மருத்துவம் சார்ந்த பாடப்பிரிவுகள் அடங்கிய கல்லூரிகளில் இடஒதுக்கீடு என்றைக்குமே இல்லாமல் ஆகியிருக்கிறது.”

இதுபோன்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் - கல்வி வணிகத்திற்கும், சமூகநீதி மறுப்புக்கும் ஆதரவாக உள்ளன. தனியார் நிறுவனங்கள் - உச்சநீதிமன்றம் - அரசுகள் இவை அனைத்தையும் இணைக்கும் சங்கிலியாக பார்ப்பனர்கள் இயங்குகிறார்கள் என்பதை இந்த வலைப்பின்னலால் பயன்பெறுபவர் களின் பட்டியலை ஆய்வுசெய்தால் புரியும்.

**சிறுபான்மையினர் நிறுவனங்களில் இடஒதுக்கீடு**

அரசின் கல்விநிறுவனங்களில் சிறுபான்மை யினருக்கு அவர்களது மக்கள் தொகை எண்ணிக் கைக்கு ஏற்ப பிரநிதித்துவம் வழங்க வேண்டும் என்பதை கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த என்.ஐ.ஆர்.எஃப் ஆய்வில், பொருளாதார இடஒதுக்கீடு என்ற சட்டத்துக்கு எதிரான புள்ளிவிபரங்களைச் சேகரித்துள்ளார்கள். ஆனால் சிறுபான்மையினர் எண்ணிக்கை பற்றி எந்தத் தகவலும் இல்லை. அதை வன்மையாகக் கண்டிப்போம்.

அதேசமயம், இந்த ஆய்வில் சிறுபான்மை யினர் நடத்தும் கல்வி நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு பின்பற்றப்படாமல் இருப்பதும் தெரிய

வந்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் தலித்முரசு இதழில் பேராசிரியர் தோழர் இளங்கோவன் அவர்கள் சிறுபான்மையினர் நடத்தும் 63 கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீட்டின் நிலை குறித்த தகவல்களை சான்றுகளுடன் பட்டியலிட்டார். இஸ்லாமியர்களும், கிறிஸ்த்தவர்களும் நடத்தும் அந்த 63 கல்லூரிகள் சமூகநீதிக் கொள்கைக்கு முற்றிலும் எதிராகவே உள்ளன.

அரசு நிறுவனங்களில் சிறுபான்மையினருக்கு உள்ள உரிமைக்காக நாம் போராட வேண்டும். அதேசமயம், சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ள உரிமைகளுக்காகவும் போராடவேண்டும்.

முதலில், முற்போக்கு அமைப்புகள், தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கல்விநிறுவனங்களிலும் ஜாதிவாரி இடஒதுக்கீட்டின் நிலை என்ன? மாணவர் சேர்க்கை, பேராசிரியர்கள் நியமனம் அனைத்திலும் நிரப்பப்பட்டுள்ளவர்களின் பட்டியலில் இடஒதுக் கீட்டு நிலை என்ன? என்பவை பற்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவல்களைக் கேட்டுப் பெற்று, இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த - சட்டரீதியான நடவடிக்கைகளையும், நியாய அடிப் படையிலான போராட்டங் களையும் மேற்கொள்ள வேண்டும். மாணவர் சேர்க்கை தொடங்கும் காலம் இது. திராவிடர் இயக்கங்களும், பொதுவுடைமை அமைப்புகளும் இதில் போட்டி போட்டுச் செயல்பட வேண்டும்.

என்.ஐ.ஆர்.எஃப் அமைப்பின் ஆய்வில் 37 முதன்மையான இடங்களைப் பிடித்த தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்கள் சிலவற்றைப்பற்றி மட்டும் கீழே பட்டியலிட்டுள்ளோம். தமிழ்நாட்டின் அனைத்துக் கல்வி நிறுவனங்களைப் பற்றியும் - அகில இந்திய அளவிலான 100 முதன்மை இடங்களைப்பிடித்த கல்விநிறுவனங்களைப் பற்றியும் முழுமையாகத் தகவல்கள் ஏன்.ஐ.ஆர்.எஃப் பின் இணையதளத்தில் உள்ளன. https://www.nirfindia.org/OverallRanking.html என்ற இணைப்பில் விரிவாகக் காணலாம். அவற்றைப் பதிவிறக்கம் செய்து அனைத்து தகவல்களையும் புரிந்துகொண்டு சமூகநீதிக்கான பயணத்தைத் தொடங்கவேண்டியது காலத்தின் கட்டாயம்.

## நன்றி

பல்லடம் இலட்சுமி மில்ஸ் அருகே உள்ள என்.கே.பேக்கரியின் உரிமையாளர் தோழர் நா.முத்துக்குமார் காட்டாறு வளர்ச்சி நிதியாக ரூ.3000 மும், தோழர் மணிகண்டன் மருத்துவ சிகிச்சைக்காக ரூ 1000 மும் வழங்கியுள்ளார். மிக்க நன்றி.

| Institute Name: | Total no.of students studying in all years of all programs | No. of students from Economically Backward Class | No. of students from Socially Challenged Category (SC, ST & OBC) |
|---|---|---|---|
| Hindusthan College of Arts and Science | 6054 | 4980 | 658 |
| Karpagam Academy of Higher Education | 2325 | 1906 | 210 |
| K.S. Rangaswamy College of Arts and Science | 4005 | 4005 | 0 |
| Kumaraguru College of Technology | 5158 | 4206 | 569 |
| Gobi Arts and Science College-Karattatipalayam | 3387 | 3010 | 377 |
| Fatima College (Autonomous) | 3491 | 3192 | 298 |
| Holy Cross College, Kanyakumari | 2105 | 1246 | 786 |
| PSNA College of Engineering and Technology, Dindigul - | 5327 | 1551 | 564 |
| Thanthai Hans Roever College Perambalur | 2521 | 2521 | 0 |
| Sri Sai Ram Engineering College | 4947 | 2447 | 1452 |
| Shanmugha Arts Science Technology & Research Academy (SASTRA) | 10567 | 7208 | 1288 |
| Saveetha Institute of Medical and Technical Sciences | 5070 | 2135 | 1726 |
| SNR Sons College, Coimbatore | 1735 | 1559 | 176 |
| S R M College of Arts and Science | 2053 | 500 | 107 |



மௌ.அர.ஜவஹர், பழனி

# விவசாயிகளின் போராட்டம் ஏற்கத்தக்கதில்லையா?

விவசாயிகள் வாங்கிய கடனைக் கட்டமாட்டோம் என்று சொல்வது சரியா?கட்ட இயலாமைக்குக் காரணம் பார்ப்பன மய்ய அரசா??

வாங்கிய கடனை திருப்பிக் கட்டவேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது.அதே நேரத்தில் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்த அரசாங்கமே விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்ட முடியாதவாறு சூழ்ச்சிகரமான ஏற்பாடுகளைச் செய்து வைத்த பின் விவசாயிகள் கடனைத் திருப்பிக் கட்ட வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது சரியல்ல.

**அந்த சூழ்ச்சிகரமான ஏற்பாடுகள் என்ன?**

1. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களான நெல், தானியங்கள், காய்கறி, கரும்பு (இதில் கரும்புக்குப் பணப்பயிர் என்று வேறு பெயர்) போன்றவற்றின் விலை ஏற்றத்தைவிட, விவசாயி விவசாயத்திற்கு வாங்கும் உரம், பூச்சி மருந்து போன்ற விவசாய உள்ளீடு [INPUT] பொருட்களின் விலை ஏற்றமும், விவசாயி தன் வாழ்க்கைக்கு வாங்கும் துணிமணி, மருந்து, சோப்பு போன்ற பொருட்களின் விலை ஏற்றமும் மிகமிக அதிகமாகும். எனவே விவசாயிகளின் வாங்கும் சக்தி குறைந்து கொண்டே வருகிறது.

2. விவசாயிகளின் செலவுக்கணக்கைக் கணக்கிடும்போது, இடுபொருள் செலவை மட்டும் கணக்கிடுவது தவறு. இதில் விவசாயிகளின் உழைப்பு, மேற்பார்வை (தொழிற்சாலைகளில் மேற்பார்வையாளர்களின் சம்பளம் 25 ஆயிரத்திலிருந்து அந்தத் தொழிற்சாலையின் தகுதிக்கேற்ப), நிலத்தின் மூலதன மதிப்பு இவற்றை கணக்கில் கொள்வதில்லை.மேலும் ஒரு வருடத்திற்கு என்று கணக்குப் பார்க்காமல் குறைந்தது 10 வருடத்திற்கு கணக்கிட்டுப் பார்க்கவேண்டும்.

3. இந்த சூழ்ச்சிக்கெல்லாம் அடிப்படை, பார்ப்பன மய்ய அரசு விவசாயத்தைத் தொழிலாக அங்கீகரிக்காமல் இருப்பதே. அப்படி அங்கீகரித்தால் தான் நலிந்த தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப் படும் கடன் தள்ளுபடி, மின்கட்டணத்தை எவ்வளவு பாக்கி வைத்திருந்தாலும் இணைப்புகள் துண்டிக்கப் படாமல் இருப்பது போன்ற நியாயமான சலுகை களால் விவசாயம் நட்டம் அடையாமலிருக்கும்.

4. விவசாயிகள் பயன்படுத்தும் விவசாய இடுபொருள், அன்றாடம் பயன்படுத்தும் துணிமணி, சோப்பு, பவுடர், உடல் நிலை சரி இல்லாமல் போனால் வாங்கும் மருந்துப் பொருட்கள் போன்ற அனைத்திற்கும் உற்பத்தி செய்பவனே விலை நிர்ணயம் செய்கிறான். மாறாக

இத்தனை நட்டத்தோடு உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்களுக்கு விவசாயிகள் விலை நிர்ணயிக்க முடியாது.

**ஆடை அவிழ்ப்புக்குக் காரணம் பார்ப்பன ஆதிக்கமே!**

விவசாயத்தில் செயற்கை உரம், பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தியதால் விவசாயிகளின் நண்பனாகிய மண்புழுக்கள் அழிந்துவிட்டன. மண்ணுள் நீர், காற்று செல்வதற்கு ஏதுவாக மண்புழுக்கள் மண்ணை நெகிழச் செய்துவிடும். மண்புழுக்களின் அழிவால் நிலம் கெட்டி பட்டு, காங்ரீட் தரை போல ஆகி , பெய்யும் மழை நீர் வீணாகிக் கடலில் கலந்துவிடுகிறது. இதனால் வருடா வருடம் தண்ணீர் பற்றாக் குறையால் விவசாயமும் விவசாயிகளும் செத்து செத்துப் பிழைக்க வேண்டியதாகிறது.

இந்த செயற்கை உரத்தையும் பூச்சிக்கொல்லி மருந்தையும் நமக்கு அறிமுகப்படுத்தியது எம்.எஸ்.சுவாமிநாதன் என்கிற பார்ப்பனர்தான். இவருக்கு இந்தப் பார்ப்பன மய்ய அரசு முழு ஒத்துழைப்புக் கொடுத்தது. இதன் காரணமாக விவசாயிகள் காலப்போக்கில் இந்த செற்கை உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளையே கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவற்றின் விலை உயர்வு, தண்ணீர் போதாமை போன்றவற்றால் தொடர்ந்து விவசாயம் பெரு நட்டத்திற்குள்ளாகிவிட்டது. மண்ணை மலடாக்கி, மக்களை நிரந்தர நோயாளியாக்கி விவசாயத்தைப் பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளைக் காடாக் கியது இந்த பார்ப்பன மய்ய அரசும் எம்.எஸ்.சுவாமி நாதனும்தான். இதன் காரணமாகத்தான் நம் விவசாயிகள் அதீத நட்டத்துக்குள்ளாகி இன்று ஆடை அவிழ்ப்பு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள்.

**விவசாயிகளின் எதிரி யார்?**

வேறு யார்? பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டுக் கூட்டுக் கொள்ளையர்கள் தான். விவசாயம் என்பது ஒவ்வொரு மாநிலம் சார்ந்ததாகும். அது அந்தந்தத் தேசிய இன அடை யாளங்களைக் கொண்டிருக்கும் (அது முற்போக்கா இல்லையா என்பது வேறு விசயம்). விவசா யத்தை இந்தியா முழுமைக்கும் மய்யப்படுத்திவிட முடியாது. எனவே விவசாயத்தைப் பொறுத்த வரை அந்தந்த மாநிலங்கள் கையாள்வது தான் சரியாக இருக்கும்.



ஆனால், மாநில அரசுகளின் நிலையோ, முனிசிப்பாலிட்டி களின் அதிகாரத்தைவிடக் கேவலமான அதிகாரத்தைக் கொண்டுள்ளன. இதில் பார்ப்பன மய்ய அரசானது, வருமான வரித்துறை என்ற அமைப்பைக் கையில் வைத்துக் கொண்டு, மாநில அரசு மந்திரிகள், அதிகாரிகளை நிம்மதியற்ற நிலையில் வைத்து, இந்தக் குறைந்தபட்ச அதிகாரத் தைக் கூட பயன் படுத்த விடாமல் செய்து வருகிறது.

மேலே சொன்ன விவசாய இடுபொருள் கொள்ளை மற்றும் அன்றாடம் விவசாயிகள் பயன்படுத்தும் துணி, சோப்பு, பவுடர், வண்டிகள், பல் துலக்கும் பேஸ்ட், பிரஷ் போன்று இன்னும் பல பொருட்களால் நம்மை அடிமைப்படுத்தி - அவற்றை விருப்பம்போல விலை ஏற்றிக் கொள்ளை அடிக்கின்றனர்.

*மய்ய அரசில் உள்ள அதிகாரம் படைத்த 55 துறைகளில் அமைச்சரகங்களில் நாட்டின் போக்கை திட்டமிடும் அதிகாரம் படைத்த பதவிகளில் பார்ப்பன ஆதிக்கம்.*

| Group | Total | OBC | SC | ST | *பார்ப்பன உயர் சாதி* |
|---|---|---|---|---|---|
| A | 74,866 | 8,316 | 10,434 | 4,354 | 51,762 |
| B | 1,88,776 | 20,069 | 29,373 | 12,073 | 1,27,261 |

*(வாசிக்கவும் இடஒதுக்கீட்டு உரிமை :- காட்டாறு வெளியீடு)*

*பார்த்தீர்களா எப்படி உள்ளது பார்ப்பன ஆதிக்கம்!*

**விவசாயிகள் என்ன செய்ய வேண்டும்?**

1. விவசாய சங்கங்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது. ஏனெனில் இந்த மாநில அரசு உரிமை அற்ற கையாலாகாத அரசு. மேலும் அரசியல் கட்சிகளில் உள்ள பலவீனங்கள் விவசாய சங்கங்களிலும் நுழைந்து பதவி வெறி, பொறாமை, தன்னலம் ஆகியவை வளர்ந்து சங்கத்தை பார்ப்பன அடிமை அமைப்பாக்கிவிடும்.

2. கிராமப் புறங்களில் நடை பெறும் சாதிய நடை முறைகளைத் தவிர்த்து சம உரிமை அடிப்படையில் தீர்த்து ஒற்றுமை ஏற்படுத்துவதில் விவசாய சங்கங்கள் முன்னணியில் நிற்க வேண்டும். இந்த ஒற்றுமைதான் வெற்றிக்கு வழி வகுக்கும்.

3. விவசாயிகளின் எதிர்ப்பு வெறும் அரசு எதிப்பு என்கிற நிலையை மாற்றி உண்மையான ஆதிக்கச் சக்தியை எதிர்த்து இருக்க வேண்டும்.

4. விவசாய சங்கங்கள் இது போன்ற நடைமுறையால் சமூக இயக்கமாகி, சமூக அழுத்ததை ஏற்படுத்தி அரசை செவிசாய்க்கச் செய்ய வேண்டும்.

அரசூர் அ.ப.சிவா

# இலக்கு மறந்த




தமிழ் திரையுலகின் முக்கிய இயக்குநர் கே.வி.ஆனந்த் இயக்கத்தில் வந்திருக்கும் படம் கவண். ஒளிப்பதிவாளரான இவர் இயக்குநராக மாறிய திலிருந்து முக்கியப் படங்களில் எழுத்தாளர்கள் சுபா துணையுடனே வலம் வருவார். இப்படத்தில் கபிலனும் சேர்ந்திருக்கிறார் . தன் முந்தைய படமான 'கோ' வில் பத்திரிக்கை துறை என்ற தளத்தில் பயணித்த இயக்குநர் இம்முறை பயணித்திருப்பது சின்னத்திரையில்.

உலகமயமாக்கலுக்குப் பின் அசுர வளர்ச்சி அடைந்திருக்கும் துறைகளில் முக்கியமானது சின்னத்திரை எனப்படும் தொலைக்காட்சி ஊடகம். வட இந்திய ஊடகங்கள் போல தமிழ் செய்தி ஊடகங்களும் விவாத நிகழ்ச்சிகளை நடத்தி வரும் இன்றைய காலகட்டத்தில் பொழுது போக்குத் தொலைக்காட்சிகளை விட செய்தித் தொலைக்காட்சிகளே அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

நெம்பர் 1 சேனல் ஆக இருக்க, ஒரு தனியார் தொலைக்காட்சி என்னென்ன குறுக்கு வழிகளைக் கையாள்கிறது என்பதை விரிவாக சொல்லியுள்ளது கவண். தனிப்பட்ட முறையில் திரைப்படமாகப் பார்த்தால் கதாநாயகி மடோனா, கதை நாயகனாக நடித்துள்ள விஜய் சேதுபதி, டி.ராஜேந்தர், விக்ராந்த் உள்ளிட்ட அனைவரும் தங்கள் பங்கைச் சிறப்பாக ஆற்றியுள்ளார்கள்.

படத்திலேயே மிகவும் சொதப்பலான பங்கு இசையமைப்பாளர் ஆதியுடையது.. தனது ஆஸ்தான இசையமைப்பாளரான ஹாரீஸ் ஜெயராஜிட மிருந்து விலகி ஆதியை பயன்படுத்தியது இயக்குநரின் மிகப்பெரிய தவறு. துள்ளலாக அமைந்திருக்க வேண்டிய புத்தாண்டுப் பாடலில் ஜீவனே இல்லை. பிண்ணனி இசை அதை விட சொதப்பல்.. தனிப்பட்ட முறையில் ஆதிக்கு நம் கோரிக்கை என்னவென்றால் நீங்க மீசையை முறுக்கிட்டு கலாச்சரத்தையோ, அல்லது வாலை முறுக்கிட்டு ஜல்லிக்கட்டையோ காப்பாத்தப் போனால் தமிழ் திரை இசை காப்பாற்றப்படும்.

விஜய் சேதுபதி, மடோனா இடையே நடக்கும் ஊடலில் ஆண் தவறிழைத்து விடுவான், பெண் கோபப்பட்டு ஒதுங்குவாள், பின்பு ஆண் அப்பெண் பின்னாலேயே சுற்றுவான் இறுதியில் பெண் அதே ஆணால் மீண்டும் கவரப்படுவாள். அதற்கான காரணம் அவனின் வீரம். வழக்கம் போல ஆணின் வெற்றிக்கு பின் பெண் இருப்பாள் என இம்மி பிசங்காமல் இந்து ஆணாதிக்க சினிமா என்பதை கவணும் பிரதிபலித்திருக்கிறது.. வழக்கமாக நாமும் கடந்து போய்விட்டோம்.. விக்ராந்த்-தர்சனா (அப்துல்- கல்பனா) ஜோடிகளின் விசயத்தில் அதை ஈடு கட்ட முயற்சி செய்துள்ளார் போதவில்லை..

போராட்டக் குழுவில் உள்ள சிறுபான்மை மக்களின் சமூகநிலை அதை ஊடகங்கள் பிரதி பலிப்பது, பெண் போராட்டக்காரர்களின் நிலை ஆகியவற்றை இயன்ற வரை சரியாகக் காட்டி இருக்கிறார். அதென்ன போராட்ட குழுவில் அப்துல்லா - முருகன் என மத நல்லிணக்கம் என சப்பைக் கட்டு? இங்கே மதங்கள் கூட போரட்டத் தால் ஒருங்கிணையும். இந்து மதத்தின் ஏற்ற தாழ்வான ஜாதிகள் போராட்டத்தில் கூட இணை யாது என்பதை தமிழகமெங்கும் நடைபெறும் டாஸ்மாக்குக்கு எதிரான போராட்டங்கள் நமக்கு தெளிவாக காட்டுகின்றன.

அடுத்து, மக்களுக்கு எதிரான தொழிற்சாலை அரசியல்வாதியுடையது என்பதும், ஒழுக்கமின்மை என்பது எப்போதும் போதையில் இருப்பது என்பது போலாகப் படம் நெடுக - பொதுப் புத்திக்குத் தீனி போடுபவையே அதிகம்.

அரசியல் வாதிகளை ஊடகங்கள் இப்படி பூதாகரமாக, நல்லவனாகக் காட்டுகிறது என்ப தையும் அதற்கான வழிமுறைகளையும் வெளிப் படையாகச் சொல்லியிருப்பது தமிழ்ச் சூழலுக்குப் புதுசு பாராட்டத்தக்கது.. இதை அப்படியே மோடி விசயத்தில் பொருத்திப்பார்ப்பது மிகச்சரியாக இருக்கும்.

மிக முக்கியமாக 'கவண்' இலக்கு மாறிய இடம், ஊடகத்துறையில் உள்ள பார்ப்பன அதிக்கம்

( காட்டாறு வெளியிட்ட இட ஒதுக்கீட்டு உரிமை புத்தகத்தின் செய்தி காண்க பெட்டி செய்தி) பற்றி வாயே திறக்காமல் இருந்ததே. திரையில் அதெல்லம் காட்டினால் படமே வெளிவராது என்ற சப்பை கட்டெல்லாம் 'ஜீவா' படம் வெளிவராத்துக்கு முன் சொல்லியிருந்தால் ஏற்றுக் கொண்டிருக்கலாம்..

இன்று தொலைக்காட்சிச் செய்திகளில், விவாதங்களில், மற்றும் முக்கியமாக அனைத்து தொலைக்காட்சிகளுக்கும் செய்தி தரும் பி.டி.ஐ, ஏ.என்.ஐ போன்ற செய்தி நிறுவனங்களில் பார்ப் பனர்கள் பங்கே அதிகம்.. குறைந்தபட்சம் குறியீடுகள் மூலமாகவாவது உணர்த்தியிருக்கலாம். அவ்வகை யில் இலக்கு மறந்த கவணே இது



இறுதியாக, தொலைக்காட்சி நிறுவனங்களில் இருக்கும் பெரியாரிய, பொதுவுடமை, பெண்ணிய, சிந்தனையுடைய நண்பர்களுக்கு கவண் திரை விமர்சனம் மூலம் காட்டாறு ஒரு கோரிக்கை வைக்கிறது, இதை செயல் படுத்த விவாதியுங்கள், இதோ அக்கோரிக்கை.

கவணில் டி.ஆரின் முத்தமிழ் தொலைக் காட்சிக்கு சேதுபதி டீம் வரும் போது பாலியில் நிகழ்ச்சி நடத்தும் இடமாக அது இருக்கும். அந்நிகழ்வை மிகப் பெரிய தவறாக சேதுபதி சொல்ல அதற்கு டி.ஆர் சொல்வார் எது கேவலம் இன்னிக்கு உலகம் போர் இல்லாமல் இருக்கிறது. அதற்குப் பாலியல் முக்கியம் என்பார்.

தமிழ்ச்சூழலில் பாலியல் கல்விக்கான விவாதம் ஒரு புறம் நடந்தாலும், தொலைக் காட்சிகளும் பாலியல் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத் துவம் தருவதில்லை. அதென்ன இரவு 11 மணிக்கு மேல் மிட்-நைட் மசாலா போலவே பாலியல் கேள்வி பதில் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை ஒளி பரப்புவது? அதுவும் பெரும்பாலான நிகழ்ச்சிகள் அறிவுப் பூர்வமாக இல்லாமல் தரமற்றதாகவே உள்ளது..

ஆகவே, பாலியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி களைத் தொலைக்காட்சிகள் முறையான பயிற்சி பெற்ற Sexologists, Psychiatrist மருத்துவர்களை கொண்டு ( சிவராஜ் சித்த வைத்திய சாலை போல இல்லாமல்) பிரைம் டைம் எனப்படும் இரவு 8 மணியிலிருந்து 10 மணிக்குள் நடத்த வேண்டும் என காட்டாறு கோரிக்கை வைக்கிறது.. அதுவே ஆரோக்கியமான சமூகம் அமைய வழி வகுக்கும் ..

**ஊடகத்துறையில் பார்ப்பன ஆதிக்கம்**

இந்தியாவின் ஊடகத்துறையில் முன்னணியில் உள்ள 315 மூத்தபத்திரிகையாளர்களிடம் 2006 ல் ஒரு சர்வே நடத்தப்பட்டது. நமக்கு எந்தச் செய்தி வர வேண்டும், இன்று தொலைக் காட்சிகளில் எந்தச் செய்தி விவாதிக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயிப்பவர்கள் இந்த மூத்த பத்திரிக்கை யாளர்கள். ஆங்கில, இந்தி மொழிகளில் வெளி யாகும் அச்சு, காட்சி, இணையதளம் என அனைத்து துறைசார்ந்தும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

*Centre for the Study of Developing Societies (CSDS)* என்ற புது டில்லியில் உள்ள நிறுவனம் பேராசிரியர் யோகேந்திர யாதவ் தலைமையில் இந்த ஆய்வை நடத்தியது. பேராசிரியர் யோகேந்திரா அவர்கள் *University Grants Commission and National Advisory Council (NAC) on Right to Education Act (RTE)* போன்றவற்றில் பணியாற்றியவர்.

| பார்ப்பனஉயர்ஜாதி | OBC | SC/ST | Muslims | Cristians |
|---|---|---|---|---|
| 88 % | 4% | 0% | 3% | 2.3% |

*Source: CSDS, The Hindu 05.06.2006*

இந்த ஆய்வில் மக்கள் தொகையில் **5 சதவீதம்** மட்டும் உள்ள பார்ப்பனர்கள் **49 சதவீதம்** ஆதிக்கம் செலுத்துகின்றனர். ராஜ்புத்திரர், காயஸ்தா போன்ற ஆதிக்கஜாதிகளையும் சேர்த்து **88 சதவீதம்** உள்ளனர். குறிப்பாக ஆங்கில செய்தி ஊடகங்களில் பிற்படுத்தப்பட்டவர்கள் வெறும் **1 சதவீதம்** தான் இருக்கின்றனர். தாழ்த்தப்பட்டவர்கள் அதுவும் இல்லை.

இந்தியாவின் அரசியல், பொருளாதாரம், அரசு நிர்வாகம், நீதித்துறை, ஊடகத்துறை, வங்கித்துறை என அனைத்திலும் இந்த 2016 ஆம் ஆண்டிலும் பார்ப்பனர்கள் தான் ஆதிக்கச் சக்தி களாக இருக்கிறார்கள் என்பதை ஆதாரங்களுடன் விளக்கிள்ளோம். இன்னும் அணுசக்தித்துறை, இராணுவம், அறிவியல் ஆராய்ச்சித் துறை போன்ற பல துறைகள் முற்றிலும் பார்ப்பன மயமாகவே உள்ளன.

பிற்படுத்தப்பட்டவர்கள் தங்களது எதிரிகளாகத் தாழ்த்தப்பட்டவர்களைக் கருதுவதும், தாழ்த்தப் பட்டவர்கள் தங்களது எதிரிகளாகப் பிற்படுத்தப் பட்டவரைக் கருதுவதும் – அதன் அடிப்படையில் நாமே ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு இருப்பதும் தொடரும் வரை இந்தப் பார்ப்பன ஆதிக்கத்துக்கு முடிவே கிடையாது.

க.பெரியார்நம்பி

# ‘முருகன்குடி’

## ஜாதி ஒழிப்பை நோக்கிப் பயணிக்கும்

## ஒரு முன்னோடிச் சிற்றூர்



ஜாதி இறுக்கம் நிறைந்த தமிழக கிராமங்களில் ஜாதிக் கட்டுகளை மீறுபவர்களை வெட்டிக் கொல்வதும், ஊரை விட்டு ஒதுக்கி வைப்பதும், ஜாதி மறுப்புத் திருமணங்கள் செய்வோரைக் கட்டப்பஞ்சாயத்து செய்து பிரித்து வைப்பதும், மீறுபவர்களை உயிரோடு எரிப்பதும், ஜாதி கடந்த காதலர்கள் சிக்கவில்லை என்றால் ஒட்டு மொத்த சேரியைக் கொளுத்துவதும், காதலித்த இளைஞனின் பெற்றோர்கள், உறவினர்களை அடித்துத் துன்புறுத்துவதும், சொத்துக்களை கொள்ளையடிப்பதும் அதிகமாகிவரும் சமூகச்சூழல் வாழ்ந்து வருகிறோம்.

நீருபூத்த நெருப்பாக இருந்த ஜாதி உணர்வை இடைநிலை ஜாதி மக்களின் கல்வி, வேலை வாய்ப்பிற்காக உள் ஒதுக்கீடு கேட்டு, இடஒதுக் கீட்டை பாதுகாப்பதற்காக இயக்கம் தொடங்கு வதாக தங்களை அடையாளம் காட்டிக் கொண்ட பா.ம.க போன்ற அமைப்புகள் மெல்ல, மெல்ல அரசியல் பக்கம் தங்கள் பார்வையைத் திருப்பிய போது, பெரியாரின் பேருழைப்புக்கு எதிராக சமுதாயத்தை பின்னோக்கிக் கொண்டுசென்றார்கள். உடுமலை சங்கர், திருச்செங்கோடு கோகுல்ராஜ், தர்மபுரி இளவரசன் என வாழத் துடித்த சேரி இளைஞர்களின் உயிர்களைப் பறித்த ஜாதிவெறிச் சூழலில்,தமிழகத்தில் பெரியாரைச் சரியாகப் படித்து முழுமையாக உள்வாங்கி - தமிழகத்திற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் ஒரு கிராமம் உங்கள் கண்முன் காட்ட விரும்புகிறோன்.

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பெண்ணாடம் அருகில் முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் மக்களைக் கொண்ட முருகன்குடி என்ற சின்னஞ்சிறிய கிராமத்தில் ஏற்பட்ட மாற்றத்தை நம் கண்முன்னே நிறுத்து கிறார்கள் அறிவியல் ஆசிரியர் பழனிவேல், இயற்கை விவசாயி முருகன் இளைஞர் பிரசாத் ஆகியோர்.

**பழனிவேல் ஆசிரியர்:**

**திராவிடர் இயக்கச் சிந்தனை உங்களுக்கு எப்படி வந்தது?**

பெரியார் காலத்தில் திராவிடர் கழகத்தைச் சார்ந்த இராஜவேல் என்பவர் எங்கள் ஊரில் ‘சிந்தனையாளர் கழகம்’ என்ற பெயரில் அவ்வப்போது பொதுக் கூட்டங்கள் நடத்துவார். அதில் பக்தர்களின் சிந்தனைக்கு 100 கேள்விகள் என்று துண்டறிக்கை அச்சிட்டு வழங்குவார். அந்தத் துண்டறிக்கையில் இருந்த கேள்விகள் என்னைச் சிந்திக்க வைத்தன. அதன் மூலமாக நாத்திகனாகி பெரியாரின் சிந்தனைக்குத் தூண்டப்பட்டேன்.

**பெரியாரின் நாத்திகக் கருத்துக்கள் மட்டும்தான் உங்களை ஈர்த்ததா?**

முதலில் பெரியாரை எனக்கு அறிமுகப் படுத்தியது நாத்திகம்தான் என்றாலும் பெரியார் எழுதிய புத்தகங்களை அதிகமாகப் படித்ததினால் ஆசிரியர் வீரமணி அய்யா, ஆனைமுத்து ஆகியோருடன் நேரடியாக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர்களை வைத்து எங்கள் ஊரில் நான் நடத்திய நிகழ்ச்சிகள் என்னை மேலும் பெரியாரைப் படிக்கத் தூண்டியது. அதன் விளைவு “ஜாதி ஒழிப்பே முதல் பணி” எனத் தெரிந்துக்கொண்டேன். பொன்பரப்பி எங்கள் ஊருக்கு அருகில் இருப்பதால் தமிழ்த்தேசியச் சிந்தனைக்குத் தூண்டப்பட்டேன்.

**இன்றைய தமிழ் தேசியவாதிகள் பெரியாரைக் கடுமையாக விமர்சிக்கிறார்களே? பெரியாரை ‘இராமசாமி நாயக்கர்’ என்றும் அவர் தெலுங்கர் தமிழரில்லை என்று விமர்சிக்கிறார்களே?**

தொடக்கக் காலங்களில் தோழர் மணியரசன் திராவிடர் கழக மேடைகளில் தமிழ்த்தேசியம் பேசியதால் அவருடன் நெருக்கம் ஏற்பட்டு இணைந்து செயல்பட்டோம். பிறகு மணியரசன் பெரியாரை விமர்சிக்கத் தொடங்கியவுடன் அவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அத்தோடு தமிழ் பேசும் பார்ப்பனர்களையும் தமிழர்கள் என்றும் ஜாதி ஒழிப்பைச் சிறிதும் கண்டு கொள்ளாததால் மாநில செயற்குழுவில் மணியரசனை நேரடியாகக் கடுமையாக விமர்சித்து விட்டு, வெளியேறி எந்த அமைப்பிலும் சேராமல் பெரியாரியலை எங்கள் ஊரில் பரப்பி வருகிறேன். ஜாதி ஒழிப்பு பரப்புரையும் செய்து வருகிறேன்.

**ஜாதி ஒழிப்பை முதன்மையாகக் கொண்டு செயல்படுவதாகக் கூறுகிறீர்கள் அதனால் உங்கள் ஊரில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன?**

அதை நான் கூறுவதைவிட எங்கள் ஊரிலுள்ள இயற்கை விவசாயி முருகன், இளைஞர் பிரசாத் ஆகியோரைக் கேளுங்கள்.

**பிரசாந்த்:**

**இளைஞர்கள் மத்தியில் இவ்வளவு தாக்கம் வரக் காரணம் என்ன?**

நாங்கள் நாற்பது ஐம்பது இளைஞர்கள் நாத்திகர்களாக இருக்கிறோம். அது மட்டுமில்ல. இங்குள்ள நாத்திகர்கள் குடும்பம் குடும்பமாக நாத்திகர்களாக உள்ளோம். நாத்திகக் கருத்துக்களே பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. இந்துமத மோகத்திலிருந்து இளைஞர்கள் வெளியேறியதால் கிராமத் திருவிழாக்கள் அதிகம் நடைபெறு வதில்லை. அப்படி நடைபெற்றாலும் இளைஞர்கள் ஜாதிவாரியாக பேனர்கள் வைப்பதில்லை, பிளக்ஸ் கட்டுவதில்லை. பெரும்பாலான ஜாதிக் கலவரங் களுக்கு ரசிகர் மன்றங்கள் வைக்கும் பிளக்ஸ், பேனர்கள் காரணம் என்பதால் எங்கள் ஊரில் ரசிகர் மன்றங்களும் இல்லாததால் நாங்கள் நிம்மதியாக வாழ்கிறோம். இதுவே எங்கள் கிராமத்தின் வெற்றிக்குக் காரணம்.

**முருகன் :**

**பெரியாரின் கொள்கைத் தாக்கத்தினால் உங்கள் ஊரில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூறங்கள்?**

பழனிவேல் ஆசிரியரின் செயல்பாடுகளால் பெரியாரியல் சிந்தனைக்கும், தமிழ்த் தேசியச் சிந்தனைக்கும் தூண்டப்பட்டோம். எல்லா கிராமங்களைப்போல் எங்கள் கிராமமும் இந்து மத ஜாதி கட்டமைப்புக் கொண்ட ஊரே ஆகும். இங்கு விவசாயிகளை படையாச்சி என்ற இடைநிலை ஜாதியினரும், விவசாயக் கூலிகளாக, அருந்ததியர் களும், பறையர்களும் வாழ்கிறார்கள். பிள்ளைமார், ஆசாரி, செட்டியார் போன்ற மற்ற ஜாதியினரும் வாழ்கிறார்கள். ஆனால் இந்த மக்களுக்கும் அகமண முறை ஒழிய வில்லையே ஒழிய மற்றபடி இங்குள்ள மக்கள் ஜாதியை மறந்து ஒற்றுமையாகத்தான் வாழ்கிறார்கள்.

**தேநீர் கடைகளில் ரெட்டைக்குவளைமுறை, முடிதிருத்தங்களில் வேறுபாடு போன்ற தீண்டாமைக் கொடுமைகள் உண்டா?**

பெரியாரின் சிந்தனைத் தாக்கத்திற்கு முன்பு நீங்கள் கூறிய தீண்டாமைக் கொடுமைகள் நடந்தது உண்மைதான். எங்கள் தலையீட்டிற்குப் பின்பு அந்தக் கொடுமைகள் முற்றிலுமாக எங்கள் ஊரில் ஒழிக்கப்பட்டுவிட்டது. இங்கு தேநீர்க்கடைகள் பொது இடங்கள் அனைத்திலும் மக்கள் அனைவரும் சமமாகத்தான் நடத்தப்படுகிறார்கள். பெரியாரின் சிந்தனைக்குத் தூண்டப்பட்ட நாங்கள் மக்களிடம் இது குறித்து பிரச்சாரம் செய்தோம். மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். எங்கள் ஊரில் அனைத்துத் தரப்பு மக்களும் ஒற்றுமையாக வாழ்கிறோம்.

**ஜாதி, மத திரைப்பட மோகங்களால் சீரழியும் மக்களிடம் எப்படி ஒற்றுமையை ஏற்படுத்தினீர்கள்?**

எங்கள் ஊரில் எந்த நடிகருக்கும் ரசிகர் மன்றங்கள் கிடையாது. இந்துமதப் பண்டிகை களுக்கு மக்கள் ஆர்வம் காட்டுவது கிடையாது. தீபாவளியை பெரிய பண்டிகையாகக் கொண்டாட மாட்டார்கள். விநாயகர் சதுர்த்தி கொண்டாடுவதே இல்லை. 10 அடி, 20 அடி பிள்ளையாரை வைத்து வழிபடும் வழக்கமே இல்லை. இங்குள்ள மக்களே பிள்ளையாரை ஒரு பெரிய கடவுளாகக் கருதுவதே இல்லை. பிள்ளையார் ஊர்வலமும் இல்லை.

விவசாயத்தை முழுக்க நம்பி நாங்கள் வாழ்வதால் விவசாயம் சார்ந்த விழாவான பொங்கலை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவோம். அனைத்து ஜாதி மக்களையும் ஒன்றிணைத்து மிகப் பெரிய விழாவாக ஊரே பொங்கலை மட்டும்தான் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என அமர்க்களப்படுத்துவோம்.

பொங்கல் விழாவில் படையாச்சி இளைஞர்கள், மாணவர்கள் ‘அம்பேத்கர்’ படம் போட்ட டி.சர்ட் அணிந்துக்கொண்டு பறை அடிப்பார்கள். எனது தம்பி மகன் மிகவும் சிறப்பாக பறையடிப்பான். படையாச்சி வீட்டுப் பையன் பறையனாட்டம் பறையடிக்கிறானே என்று பேசு வார்கள். அது எங்களுக்கு உற்சாகம் கொடுக்கும். பெரியாரை பொதுவானத் தலை வராகப் பார்ப்பதுபோல் அம்பேத்காரையும் நாங்கள் அனை வருக்குமான பொதுவானத் தலைவராகத்தான் பார்க்கிறோம்.

**விநாயகர் சதுர்த்தி இல்லை பிள்ளையார் ஊர்வலம் இல்லை என்கிறீர்களே? இரசிகர் மன்றங்கள் இல்லை என்கிறீர்களே? ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி போன்ற இந்துத்துவா அமைப்புகள் இங்கு இல்லையா?**

இல்லவே இல்லை, பிள்ளையாரை வைத்துத்தானே பி.ஜே.பி, ஆர்.எஸ்.எஸ் உள்ளே நுழைய முடியும். விநாயகர் சதுர்த்தியால் ஏற்படும் பிரச்சனைகளை மக்களிடம் எடுத்துக் கூறினோம். மக்களே விநாயகர் சதுர்த்தி வேண்டாம் என முடிவு செய்துவிட்டார்கள்.

**ஜாதி அமைப்புகள், ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி போன்ற இந்துத்துவா அமைப்புகளிடமிருந்து எப்படி இளைஞர்களை வென்றெடுத்தீர்கள்?**

சேரி இளைஞர்கள் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து தொழில்நுட்பம் சார்ந்த கல்வியைக் கொடுத்தோம். ஐ.டி.ஐ பால்டெக்னிக் போன்ற கல்வி நிறுவனங்களில் மக்களுக்கு மிகவும் தேவைப்படும் எலக்ட்ரீசின், மெக்கானிக், பிட்டர் போன்ற பணிகளுக்குச் சேரி இளைஞர்களைத் தயார் செய்தோம். அந்த இளைஞர்களின் சேவை கட்டாயம் தேவை என்ற தவிக்க முடியாத சக்தியாக மாற்றிக் காட்டினோம்.

கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள், எலக்ட்ரீ சியன் போன்ற பணிகள் நடுவீடு வரை சென்று பார்க்கும் பணி என்பதால் அந்த இளைஞர்களின்

சேவை கட்டாயம் என்ற நிலை ஏற்பட்டது. மெல்ல, மெல்ல மாற்றம் ஏற்பட்டு ஜாதிக்கட்டுத் தளர்ந்தது.

எங்கள் பகுதி கரும்பு விவசாயம் என்பதால் கரும்பு வெட்டுவதற்கு ஒரே வண்டியில் சேரியில் உள்ள இருபால் இளைஞர்களும் ஊரிலுள்ள இருபால் இளைஞர்களும் ஒன்றாகச் செல்வார்கள். அவர்கள் வீட்டு உணவை இவர்களும் - இவர்கள் வீட்டு உணவை அவர்களும் பரிமாறிக் கொள்வார்கள். அது நாளடைவில் அந்த இளைஞர் களுக்குள் மாமன், மச்சான் என்று உறவு வைத்து அழைத்துக்கொள்ளும் நிலைக்குச் சென்றுவிட்டது. எங்கள் ஊரில் நாங்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறோம். பெண் கொடுப்பது பெண் எடுப்பது என்கின்ற நிலை மட்டும் வரவில்லை மற்றபடி மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்கிறோம். காலப்போக்கில் பெண் எடுத்துக் கொடுக்கும் நிலை வரும் என்ற நம்பிக்கை அதிகம் உள்ளது.

**உங்கள் இயற்கை விவசாயத்தைப் பற்றிக் கூறங்கள்?**

மண்புழு உரங்களை நாங்களே வயல் வெளிகளில் தயாரிக்கின்றோம். மீன் கழிவுகளி லிருந்து உரம் எடுத்து மாட்டுச்சாணி, மாட்டு மூத்திரம் கலந்து வயல்வெளிகளில் தெளிக் கின்றோம். செலவு மிகவும் குறைவு மகசூல் அதிகம். முதலில் சோதனை ஓட்டமாக நான் தான் துணிச் சலாக எனது வயலில் செயல் படுத்தினேன். இரசாயன உரமிட்டுச் செய்யும் விவசாயிகளைவிட கூடுதலான பலன் கிடைத்தது. பிறகு அதை எனது நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தினேன். இயற்கை விவசாயம் மெல்ல, மெல்ல வளர்ச்சி பெறுகிறது.

**விவசாயத்தையே நம்பியிருக்கும் உங்களைப்பற்றி கூறங்கள்?**

நான் ஒரு பட்டதாரி. பட்டப்படிப்பை முடித்துவிட்டு விவசாயம் செய்துவருகிறேன். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். ஒரு ஆண் குழந்தை. ஒரு பெண் நெல்லையில் விவசாயக் கல்லூரியில் (Bsc Agri) பயில்கிறார். இன்னொரு பெண் குழந்தை திருச்சி சட்டக் கல்லூரியில் சட்டம் படிக்கிறார். பையன் என்னுடன் விவசாயத்திற்குத் துணையாக இருந்து கொண்டு படித்தும் வருகிறார். நான், எனது துணைவி குழந்தைகள் அனைவரும் நாத்திகர்கள். அடுத்தமுறை நீங்கள் வரும்போது அவர்களிடமே நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**உங்கள் பெண் பிள்ளைகள் ஜாதி மறுப்புத் திருமணம் செய்தால் ஏற்றுக் கொள்வீர்களா?**

கட்டாயம் ஏற்றுக்கொள்வேன். ஒரே ஒரு நிபந்தனை எனது கொள்கை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதே.

# ‘மருத்துவ ஆய்வுக்கு உடல்தானம்’

## வழிகாட்டும் விஜயலட்சுமி – இரமேஷ்



கோவை மாவட்டம் அரசூர் கிராமத்தை சேர்ந்த இணையர் இரமேஷ்குமார் - விஜயலட்சுமி இருவரும் தங்கள் மகன் சமரனின் முதல் பிறந்தநாளை (31.03.2017) முன்னிட்டு கோவை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உடல்தானம் செய்துள்ளனர்...

நண்பர் இரமேஷ் அவர்கள் அரசூர் கிராமத்தில் நண்பர்களுடன் இணைந்து உலகப் பசுமைப் புரட்சி என்ற அமைப்பை தொடங்கி மரம் நடுவது என ஆரம்பித்து சில நற்பணிகளைச் செய்து வந்தார்.. நீர் நிலைப் பாதுகாப்பு, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, அரசு அலுவலகங்களின் மக்கள் விரோதப் போக்கு, திரையரங்குகளில் கட்டணக் கொள்ளை என தொடர்ந்து அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி வருபவர்.. சிறை சென்றவர். அவிநாசி அத்திகடவு உண்ணாவிரதம், சுங்கச்சாவடி முற்றுகை என பல போராட்டங்களில் பங்கேற்றவர்.

வழக்கமாக இப்படியாக நம்மைச் சுற்றி நண்பர்கள் நிறைய இருப்பார்கள். ஏதேனும் ஒரு புள்ளியில் ஓட்டு அரசியலில் ஈடுபட்டுக் காணமல் போய்விடுவார்கள். ஆனால் இரமேஷ் அவர்கள் தோழர் பெரியாரின் அறிவுறுத்தலின்படி இறுதி வரை ஓட்டு அரசியலில் ஈடுபட மாட்டேன் என உறுதியுடன் உள்ளார்.

அப்படிப்பட்ட நண்பர் இரமேஷ் அவர்கள் தன் மனைவியுடன் சேர்ந்து உடல்தானம் செய்து வாழும் போதும், வாழ்க்கைக்குப் பிறகும் என இளைய சமுதாயத்திற்கு முன் உதாரணமாக திகழ்கிறார். தொடரட்டும் தங்கள் சமூகப்பணி.

டாக்டர் பெரியார் செல்வி

# காற்று வெளியிடை

1999 ஆம் வருட கார்கில் போரில் ஈடுபட்ட ஒரு விமானப்படை வீரனின் காதல்கதை. ஆம் அவனுக்கு மட்டுமான காதல்கதை. அவனது ஆணாதிக்கப் புத்தியும், அவனது காதலிக்கு அவ்வப்போது வந்து போகும் சுயமரியாதையும் தான் திரைக்கதை.

இதில் அந்தப் போர்வீரனை சராசரி ஆணாதிக்கவாதியாகத்தான் காட்ட வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. காதலியைப் புரிந்துகொண்டவனாக - அவளது உணர்வுகளை மதிப்பவனாகக் காட்டி யிருக்கலாம். அதற்கு இந்தப் படத்தின் கதையோ, களமோ, திரைக்கதையோ தடையாக வரவே வராது. ஆனாலும் மணி ரத்னத்தின் இயல்பான மன வக்கிரம், பெண்களை அடக்கி வைக்க நினைத்து இந்தக் காலத்திலும் இப்படி ஒரு படத்தை இயக்கவைத்திருக்கிறது.

கார்த்தி, அதிதி யிடம் பேசும் போது, “ஆம்பளயோட நேச்சரே, Hurt பண்றது தான்.” என்கிறார். “பொம்பளதான் அனுசரிச்சுப் போகணும்” என்று தொடர்ந்து வர வேண்டிய வரிகளை நாம் புரிந்துகொள்ளும்படி காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும், “நேச்சராவே ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு இருக்கு, டாக்டரா அது உனக்கும் புரியும்” என்று கூறுகிறான். வேறுபாடு என்பதில் உயர்வு, தாழ்வு என்ற உள்ளடக்கத்தைப் பார்வையாலேயே புரிய வைத்திருக்கிறார் மணிரத்னம். இவை தான் Directorial touch போல.

குறிப்பாக, படத்தின் டீசரிலேயே வரும் வசனம், “ நீ என்ன விரும்பலேனாலும் நான் உன்ன விரும்புவேன்”, நீ என்ன வெறுத்தாலும் உன்ன விரும்புவேன்” என்று வருகிறது. வெறுத்தா விட்டுட்டுப் போக வேண்டியது தானே? அதுதானே ஆண், பெண் இருவரின் சுயமரியாதைக்கும் நல்லது. இது கடுமையான ஈவ்டீசிங், டார்ச்சர் இல்லையா?

பெண்கள் விமானப்படைக்குப் போவதாக இருந்தாலும் அழகா இருக்கணுமாம். “பெண்கள் fighter pilot ஆகக்கூட வரலாம். ஆனா அழகா இருக்கணும்” இப்படிப் படம் முழுக்க வெளிப் படையாகவும், மறைமுகமாகவும் பெண் ஓர் உயிரற்ற பொருள். அவளுக்கு ஆசைகள், கனவுகள், திட்டங்கள் இருக்கக் கூடாது. ஆணின் எண்ணங் களைச் செயல்படுத்துபவளே பெண் என்ற கருத்து தான் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காதலியும் ஒரு உயிர் தான், அவளுக்கும் சுயமரியாதை உண்டு, உணர்வுகள், உணர்ச்சிகள் உண்டு என்பதைக் கொஞ்சம்கூடக் கவனத்தில் கொள்ளாத ஒரு பொறுப்பற்ற, சராசரி இளைஞன் பாத்திரம் இந்தப் படத்திற்கு எதற்காகத் தேவை எனப் புரியவில்லை.




ஷேவ் செய்து மிலிட்டரி ட்ரஸ் போட்டி ருக்கிறார் என்ற வேறுபாட்டைத் தவிர, பருத்தி வீரனுக்கும், வருணுக்கும் கேரக்டர்படி எந்த வேறுபாடும் நமக்குத் தெரியவில்லை. 'கற்பு' என்பதைப் போலவே, காதல் என்பதும் பெண்களின் முன்னேற்றத்துக்கு எதிரிதான் என்று நாமே பரப்ப வேண்டிய காலம் வெகு விரைவில் வந்துவிடும் போல் உள்ளது.

மௌனராகம் கார்த்திக் கேரக்டர் ரேவதி யிடம், “நாளைக்கு சாயந்தரம் 4 மணிக்கு பஸ்ஸ்டாண்ட்ல மீட் பண்றோம்” என்று மிகத் திமிராக, சந்திக்கத் தூண்டுகிறார். அலைபாயுதே மாதவனும், ஷாலினியிடம் “ நாளைக்கு சாயந்தரம் 5 மணிக்கு நீ என் வீட்டுக்கு வர்ற...” என மென்மையான குரலில் மிரட்டி தன் வீட்டுக்கு வரச் செல்வார். காற்றுவெளியிடை கார்த்தியும் அதே போலத்தான் நடந்து கொள்கிறார். இதையெல்லாம் இதே படங்களில் வேறொருவன் செய்தால் அவன் வில்லன்.

இதுபோன்ற படங்களை விமர்சனங்களின்றி ஏற்றுக்கொள்கிறோம். பிறகு பெண்கள் மீது ஆசிட் வீசப்படும்போது கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறோம். நாடகத் தனமான கண்டன ஆர்ப்பாட்டங்கள் ஒழிய வேண்டுமானால் கவண், காற்று வெளியிடை போன்ற படங்களின் மீது கடும் விமர்சனங்கள் எழ வேண்டும். கே.வி.ஆனந்த், மணிரத்னம் போன்றவர்கள் மீது அனைத்து அமைப்புகளும் மக்களும் கண்டனங்களைப் பதிவு செய்யவேண்டும். கருத்துரீதியாக கடும் எதிர்வினை களை நிகழ்த்த வேண்டும். இவைகளின் வணிகம், விளம்பரம், ப்ரமோஷன் போன்றவைகளை எதிர்க்க வேண்டும்.

தமிழில்: **பிரியங்கா**
அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி




# ஆபத்தான அழகுசாதனப்பொருட்கள்

மலேசிய நாட்டில் உள்ள பினாங்கு மாநிலத்தில் கடந்த 1970 ஆம் ஆண்டிலிருந்து மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிவருகிறது 'பினாங்கு பயனீட்டாளர் சங்கம்' (CONSUMERS ASSOCIATION OF PENANG) மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றின் தரம், விலை அவற்றை வாங்கும் - நுகரும் மக்களுக்குரிய உரிமை. போக்குவரத்துக் கட்டணங்கள், திரைப்படங்கள், திரையரங்கக் கட்டணங்கள், விவசாய விளை பொருட்கள், இயற்கை விவசாயம், மருத்துவம், மருந்துகள் என பல துறைகளிலும் நுகர்வோருக்கு உள்ள உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வருகிறது.

சுற்றுச்சூழலுக்கு எதிரான பெரும் தொழில் நிறுவனங்கள், சூழலுக்கு எதிரான சில அரசின் பெருந்திட்டங்கள், பன்னாட்டு நிறுவனங்களில் சூழல் விரோதத் திட்டங்கள் என அனைத்தையும் எதிர்த்து மக்களின் நிம்மதியான வாழ்க்கைக்காகப் போராடி வரும் 'பினாங்கு பயனீட்டாளர் சங்கம்' கடந்த 27 ஆண்டுகளாக 'பயனீட்டாளர் குரல்' என்ற இதழையும், 20 க்கும் மேற்பட்ட சிறு வெளியீடுகளையும் வெளியிட்டு, மக்களிடையே நுகர்பொருட்கள் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கி வருகிறது.

90 வயதிலும் ஒரு இளம்போராளிக்குரிய போர்க்குணத்தோடு இயங்கி வருகிறார் அதன் தலைவர் எஸ்.எம்.முகம்மது இட்ரிஸ். அந்த அமைப்பைப் பற்றி அடுத்தடுத்த இதழ்களில் விரிவான கட்டுரையும், நேர்காணலும் வெளிவரும்.

இந்த அமைப்பு கடந்த ஏப்ரல் 6 ஆம் நாள் ஒரு வேண்டு கோளை விடுத்துள்ளது. நம் வாழ்க்கையில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்களில் கலக்கப்படும் மிகவும் ஆபத்தான 'மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸ்' பற்றிய அந்த அறிவிப்பை அப்படியே தமிழில் தருகிறோம்.

**பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் அறிவிப்பு:**

*மலேசிய நாட்டின் பெனாங்கில் உள்ள நுகர்வோர் கூட்டமைப்பு, சுற்றுச்சூழல் மாசுபாடு*

மற்றும் சுகாதாரத்தினைக் கருத்தில் கொண்டு, அழகு சாதனப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களில் கலக்கப்படும் மைக்ரோ ப்ளாஸ்டிக் (Microplastics) துகள்களைத் தடைசெய்ய வேண்டுகோள் விடுத்துள்ளது.

இயற்கை மூலக்கூறுகளுக்கு மாறாக மைக்ரோ ப்ளாஸ்டிக் துகள்களை, அழகு சாதனப் பொருட்களில் பயன்படுத்தப்படுவது என்பது கடந்த 50 ஆண்டுகளில் அதிகரித்துள்ளது.

மைக்ரோ ப்ளாஸ்டிக் என்பது ஒரு மீட்டரில் பத்து இலட்சத்தில் ஒரு பங்கு ஆகும். *deodorant, shampoo, conditioner, shower gel, lipstick, hair colouring, shaving cream, sunscreen, insect repellent, anti-wrinkle creams, moisturizers, hair spray, facial masks, baby care products, eye shadow and mascara* ஆகியவற்றில் மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸ் பயன்படுத்தப்படுகிறது, அவற்றின் கூழ்மைத் தன்மை, உரியும் தன்மை மற்றும் அடுக்குகளை உருவாக்கக் கரைபொருளாகப் பயன்படுகின்றன.

இதில் பயன்படுத்தப்படும் மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸ் அளவானது, அந்தப் பொருட்களின் பயன் பாட்டைப் பொறுத்து, 1 முதல் 50 மைக்ரோ மீட்டர் அளவில் பயன்படுத்தப்படுகிறது. மொத்த மூலப்பொருட்களின் சதவீதத்தில் 1% முதல் 90% வரை கலக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இறந்த தோல் மூலக்கூறுகளை அப்புறப்படுத்தப் பயன் படுத்தப்படும் களிம்புகளின் உரியும் தன்மையை அதிகப்படுத்த, அதிக அளவில் இவை சேர்க்கப் படுகிறது.

இந்தத் துகள்கள் அளவில் மிகச் சிறியதாக இருப்பதால் நீரில் நேரடியாக ஊடுருவி நீர் மாசுபாட்டிற்கான முதன்மைக் காரணியாக அமைகிறது.

பெனாங்கில் உள்ள நுகர்வோர் கூட்டமைப்பு மேற்கொண்ட களப்பணியின் முடிவில், வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் அழகுசாதனப் பொருட்களின் மேலுறைகளில், அவற்றில் மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸ் கலக்கப்பட்டுள்ளதற்கான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்ளூரிலும், உள்நாட்டிலும் தயாரிக்கப்படும் பொருட்களின் மேலுறைகளில் அத்தகைய குறிப்புகள் எதுவுமில்லை. இதனால் நுகர்வோர்களால் அவற்றைப் பிரித்தறிய இயலாத நிலை உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் ஆய்வின்படி, மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் கலக்கப்பட்ட நீரினை மறுசுழற்சி செய்யவோ, அல்லது கழிவு நீர் சுத்திகரிக்கும் முறைகளைக் கொண்டு முற்றிலும் அழிக்கவோ முடியாது.

இறுதியில் கடலில் கலந்து அங்கேயே தங்கிவிடுகின்றன. இந்த மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸ் மக்குவதற்குப் பல நூறாண்டுகள் ஆகும். மேலும் ஆய்வு முடிவுகளின் படி, இவை நச்சுத்தன்மை வாய்ந்த டைகுளோரோ டைபீனைல் ட்ரை குளோரோ ஈத்தேன்(DDT) மற்றும் பாலி குளோரி னேட்டட் டைபீனைல்களை(PCB) வெளியிடுகிறது. நச்சுத்தன்மை வாய்ந்த இவை நீர்வாழ் உயிரினங் களின் உணவாகி, அதன் மூலம் மனிதனுக்கும், இந்த சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கிறது.

கடல்நீரில் கலந்துள்ள மைக்ரோ ப்ளாஸ்டிக் துகள்கள் உண்ணும் மீன்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இயல்பாக நடக்கவேண்டிய முதிர்ச்சி அடைதல் தடை செய்யப்படுகிறது. சில மீன்கள், இயற்கையான உணவுகளைவிட அத்துகள்களை விரும்பி உண்பதால், இனப்பெருக்கம் குறைந்து அவற்றின் அழிவிற்குக் காரணமாக அமைகிறது. நுண்துகள்கள் கழிவு நீர் மற்றும் திடக் கழிவுகளின் வழியாக நீரில் பரவும் போது உணவுச் சங்கிலியைப் பாதித்து வளர்சிதை மாற்றத்தைத் தடுக்கிறது. மேலும் கடல்நீரில் மிதந்து புலம்பெயர்ந்து கரைகளில் படிமங்களாகப் படிகிறது.



இயற்கை மற்றும் தூண்டப்பட்ட முறை களிலும் இவை மக்கும் தன்மையற்று இருப்பதால், நூறாண்டுகளில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் இந்த மாசுபாட்டால் பாதிப்படையும் நிலை உள்ளது.

### ஐரோப்பிய நாடுகளில் எதிர்வினைகள்

அமெரிக்க அரசு 2017 ம் ஆண்டின் இறுதியில் மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸைப் பயன்படுத்தப்பட்ட அழகு சாதனப் பொருட்களை தடை செய்யத் திட்டமிட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக அங்குள்ள இல்லினாய்ஸ் மாகாணம் இதன் உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடைசெய்யச் சட்டம் இயற்றி 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் இரண்டு கட்டமாக செயல்படுத்த உள்ளது.

நெதர்லாந்து, ஆஸ்திரியா, லக்ஸம்பெர்க், பெல்ஜியம் மற்றும் ஸ்வீடன் போன்ற நாடுகள் ஒன்றிணைந்து மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸ் கலந்துள்ள அழகு சாதனப் பொருட்களைத் தடை செய்யத் திட்டமிட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பின் கீழுள்ள அரசு சாரா நிறுவனங்கள் மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸ் கலக்கப்பட்ட அழகு சாதனப் பொருட்களைத் தடை செய்ய இணையத்தின் வாயிலாக வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார மாசுபாட்டைக் கருத்தில் கொண்டு பினாங்கில் உள்ள நுகர்வோர் கூட்டமைப்பு மைக்ரோ ப்ளாஸ்டிக்ஸ் கலந்துள்ள அழகு சாதனப் பொருட்களின் உற்பத்தி, ஏற்றுமதி, பகிர்மானம் மற்றும் விற்பனையை முற்றிலும் தடைசெய்யுமாறு அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# அரசியல் அதிகாரம்

## புரிந்து கொள்ளப்பட வேண்டிய சில உண்மைகள்

தோழர் அம்பேத்கர்

தாய்மார்களே, பெரியோர்களே!

இன்றைய உங்கள் கருத்தரங்க நிகழ்வுக்குத் தலைமை வகிக்குமாறு என்னை அழைத்துப் பெருமைப்படுத்தியதற்கு, எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் மீது நீங்கள் வைத்திருக்கும் இந்த நம்பிக்கையை நான் பெரிதும் மதிக்கிறேன். அதே வேளை என் மீது அன்பு கூர்ந்து நீங்கள் தந்திருக்கும் தகுதியையும் அதன் பொறுப்பையும் ஏற்றுச் செயல்படுவது, இயல்புக்கு மீறிய கடுமையான பொறுப்பு எனினும், இதனைத் தவிர்ப்பது அறிவுடைமையன்று என்பதை உணர்ந்து, இப்பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டுள்ளேன்...



2. இந்திய அரசியல் அரங்கில் இன்று பெருமளவில் எழுப்பப்பட்டு வரும் கேள்வி "ஒன்றுபட்ட தன்னாட்சி பெற்ற சமூகமாக மாற, இந்திய மக்களால் இயலுமா?" என்பதுதான். இந்திய நாட்டு மக்களின் சிந்தையில் மட்டுமின்றி, பிரிட்டிஷ் பேரரசின் சிந்தையிலும், உலகின் பிற மக்கள் அனைவரின் சிந்தையிலும் பெரிதும் கலக்கம் விளைவித்துக் கொண்டிருக்கும் இக்கேள்வி குறித்து, தாழ்த்தப்பட்ட மக்களின் கண்ணோட்டம் என்ன என்பதை வரையறுப்பதற்காகவே நாம் இங்கே கூடியுள்ளோம். இந்த நாட்டின் வருங்காலத்தைப் பற்றி எடுக்கப்படும் எந்த இறுதி முடிவிலும், இன்று நாம் எடுக்கவிருக்கும் முடிவு முக்கியப் பங்கினை வகிக்கும். இந்திய விடுதலை எனும் குறிக்கோளை அடைவதை விரைவுபடுத்துவதாகவோ, சீர்கேடு செய்வதாகவோ அமையக்கூடிய ஆற்றல் நாம் எடுக்கப் போகும் முடிவுக்கு உண்டு.

எனவே இந்த கேள்விக்கு விடை அளிக்கும் பொறுப்பில் நாம் அக்கறையின்றி செயல்படக் கூடாது என்பதைத் தெளிவாக உணர வேண்டும். நாம் எடுக்கும் முடிவுகளின் நன்மை தீமைகள் குறித்து ஆழ்ந்து சிந்தித்தே செயல்பட வேண்டும். நாம் எடுக்கும் முடிவு மற்றவர்களின் முடிவுகளிலிருந்து மாறுபட்டிருக்குமோ என அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் நமது முடிவுகள் விடுதலை சிந்தனை, நேர்மையான நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும் என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

3. இந்தப் பிரச்சனைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்திய மக்கள் தனித்தன்மை கொண்ட பெரும் எண்ணிக்கையிலான இனங்களைச் சேர்ந்தவர்களென்றும், அவர்கள் பின்பற்றும் பல்வேறு மதங்களின் கோட்பாடுகள் பகைமை ரீதியில் வேறுபட்டும் முரண்பட்டும் விளங்குபவை என்றும், பல்வேறு வகையான சடங்குகளைப் பின்பற்றுகிறவர்கள் என்றும், பல்வேறு மொழிகளைப் பேசுகிறவர்கள் என்றும், ஒற்றுமையில்லாத பாரபட்சங்கள் பல கொண்டவர்கள் என்றும், முரண்படும் சமூக வழக்கங்கள் பல கொண்டவர்கள் என்றும், ஒருவருக்கொருவர் எதிரான பொருளியல் நலன்களைக் கொண்டவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்வாறு பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டதொரு பெரும் மக்கள் திரள், எவ்வாறு தன்னாட்சி

நடத்தும் சமூகமாக விளங்க முடியும் என கேள்வி எழுப்பப்படுகிறது.

இவையெல்லாம் நடைமுறை உண்மைகள். இந்தியாவின் தன்னாட்சி மீது இந்த உண்மை நிலைகள் செலுத்தக்கூடிய தாக்கத்தை அறிவுடைய மனிதர் எவரும் புறக்கணித்து விட முடியாது. இந்த நடைமுறை உண்மை நிலவரங்களை ஏற்றுக் கொண்டு அவற்றிலிருந்து நாம் என்ன முடிவுக்கு வர முடியும்? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் பெரியோர்களே! இதைப் பற்றிய உங்கள் முடிவான கருத்துக்களை நீங்கள் வெளியிடத் தொடங்குவதற்கு முன்பு இவை போன்றே வேறு பல நடைமுறை உண்மை நிலைகள் சிலவற்றையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

லட்வியா, ருமேனியா, லிதுவேனியா, யுகோஸ்லோவேகியா, எஸ்தோனியா மற்றும் செக்கோஸ் லோவேகியா ஆகிய நாடுகளின் நிலைமை குறித்து எண்ணிப் பாருங்கள். இவை யெல்லாம் உலகெங்கும் தன்னாட்சிக் கோட் பாட்டை நிறுவுவதை நோக்கமாகக் கூறிக் கொண்டு, 1914 ஆம் ஆண்டில் தொடங்கி நடத்தப்பட்ட முதலாம் உலகப் பெரும் போரின் முடிவுக்குப் பின்னர் உருவாகிய புதிய நாடுகளாகும். புதிதாக அமைக்கப்பட்ட இந்நாடுகள் அனைத்தும் விடுதலையையும் இறைமையையும் கொண்ட தன்னாட்சி நாடுகளாகும். ஒவ்வொன்றும் தனது உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் முழுமையான இறைமை பெற்ற நாடுகளே.

இந்த நாடுகளில் உள்நாட்டு சமூக நிலைமைகள் என்ன? அங்குள்ள நிலைமைகள் இந்திய நிலைமைகளைப் போன்றில்லாமல், அதைவிடச் சீர்கேடானவை என்பதை நீங்கள் அறிய வியப்படையலாம். லாட்வியாவில், லாட் மக்களுடன் ரஷ்யர்கள், செருமானியர்கள், யூதர்கள் அன்றி மற்றும் பல்வேறு தேசிய இனத்தவரும் வாழ்கின்றனர். லிதுவேனியாவில் லிதுவேனியர் களுடன் யூதர்கள், போலந்தியர்கள், ரஷ்யர்கள் ஆகியோருடன் வேறு பல சிறுபான்மையினரும் வாழ்கின்றனர். யுகோஸ்லோவேகியாவில் செர்பியர்கள், குரோசியர்கள், சுலோவேனியர்கள், ருமேனியர்கள், அங்கேரியர்கள், அல்பேனியர்கள், ஜெர்மானியர்கள், மேகயர்கள், மற்றும் பல இனத்தவரும் வாழ்கின்றனர். அங்கேரியில் மேயர்கள், செருமானியர்கள், சுலேவியர்கள் ஆகியோர் வாழ்கின்றனர். மொழியால், இனத்தால் ஒன்றுக்கொன்று வேறுபட்டும் முரண்பட்டும், உள் நாட்டிலேயே போராடும் குழுக்கள் பலவற்றைக் கொண்டவை இந்நாடுகள்.

இத்தகைய பல்வகை வேறுபாட்டினை இணைக்க மத ரீதியான பாலமும்கூட அங்கெல்லாம் கிடையாது. ரோமன் கத்தோலிக்கர்கள், கிரேக்க கத்தோலிக்கர்கள், செக்கோஸ்லவேகிய கத்தோலிக் கர்கள் போன்று கத்தோலிக்கர்களிலேயே நான் கைந்து பிரிவினர் இருப்பதுடன், எவாஞ்சலியர்கள், யூதர்கள், புராடஸ்டண்டுகள் ஆகியோருடன் வேறு பல சிறு மத குழுக்களும் காணப்படுகின்றன. இவை குறித்து சற்று எண்ணிப் பாருங்கள். இந்நாடுகளில் நிலவும் பரந்துபட்ட, பிளவுபட்ட பல்வேறு பாகுபாட்டு நிலைமைகளை விடவா இந்திய நிலைமை திகைக்க வைப்பதாக இருக்கிறது? இல்லை என்று நான் துணிந்து கூறுவேன்.

இந்தியாவைப் பற்றிய முடிவுக்கு நீங்கள் வருவதற்கு முன்னர், பல்வேறு நாட்டு நிலைமை களையும் சீர்தூக்கிப் பார்த்து தன்னிச்சையான, நேர்மையான முடிவுக்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன். ஆகவே பெரியோர்களே! இனம், மதம், மொழி, பண்பாடு ஆகிய பல்வேறு வகையாலும்; பாகுபாடற்ற பல்வேறு வகை மக்களைக் கொண்ட லாட்வியா, லிதுவேனியா, யுகோஸ்லேவியா, எஸ்தோனியா, செக்கோஸ் லவேகியா, அங்கேரி, ருமேனியா ஆகிய நாடுகளில் மக்கள் ஒன்றுபட்டு தமது நாட்டில் தன்னாட்சி சமூகங்களாய் விளங்க முடியும் என்னும் போது, இந்தியர்களால் ஏன் இயலாது என எண்ணிப் பாருங்கள். இயலாதென்பதற்கான காரணங்கள் எதையும் என்னால் காண இயலவில்லை. அப்படிக் காரணங்கள் கூற இயலும் எனக் கருதும் நண்பர்கள் இருப்பின், அவர்கள் கூறும் காரணங்களைக் கேட்டறிய விரும்புகிறேன்.

4. இத்தகைய பன்முக வேறுபாட்டுக் கூறுகள் அனைத்தையும் சீரான ஒரே கூறாக ஒன்றிணைத்த பிறகுதான் தன்னாட்சி நிலையைப் பெறத்தக்க சமூகம் உருவாக முடியும் என்று கருதுவது, தன்னாட்சி முறையே வேற்றுமைக் கூறுகளை ஒன்றிணைத்துப் பிணைக்கவல்ல ஆற்றல் கொண்டதென்பதை மறந்து, குதிரைக்கு முன் வண்டியைப் பூட்டுதல் போன்ற எண்ணப் போக்காகும் என்று எனக்குத் தோன்றுகிறது. தமது எல்லைக்குள் ஒரே மொழியால், ஒரே மதத்தால், ஒரே பண்பாட்டால் ஒன்றுபட்ட சீரான மக்கள் குழுமத்தைப் பெற்றிருப்பது, மிகச் சில நாடுகளுக்கே வாய்த்துள்ள அரியதோர் நிலையாகும். ஆனால் வரலாற்று, புவியியல், அரசியல் காரணங்களால், மொழியால், மதத்தால், பண்பாட்டால் வேறுபடும் மக்கள் குழுக்களே பெரும்பாலான நாடுகளில் காணப்படுகின்றன. அங்கெல்லாம் இவ்வேறு பாடுகள் காலத்தால் ஒன்றோடொன்று கலப்புற்று உள்ளன.

சீரான மக்கள் குழுமம் எனும் அளவுகோலை இம்மக்களின் பால் நீட்டியிருந்தால், அவர்களெல்லாம் இன்றைக்குத் தமது வாழ்க்கை வழியாக்கிக் கொண்டிருக்கும் தன்னாட்சி முறை எனும் திட்டத்தின் கீழ் வந்திருக்கவே முடியாது. மேலும் நன்கு சிந்தித்துப் பார்த்தால், தங்கள் பழைய நிலைகளில் உதிரிகளாய்ப் பிரிந்து வேறுபட்டிருந்த தனிக் குழுக்களை எல்லாம் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட தன்னாட்சி அரசமைப்புச் சட்ட மல்லவா ஜெர்மன் மக்களையெல்லாம் ஒன்றாக

இணைத்தது? 1870 ஆம் ஆண்டுக்கு முன்னர் பவேரியர்கள், பிரஷ்யர்கள், சாக்சானியர்கள் எனத் தனித்தனிக் குழுக்களாக, இனங்களாக, நாடுகளாக இருந்த மக்களைப் பொது அரசின் கீழ் கொண்டு வராமல் ஒன்றிணைத்திருக்க முடியுமா?

பலவகையாலும் வேறுபட்ட மக்களை, ஒரு தேசிய இனமாக ஒன்றிணைப்பதற்கான ஒப்பற்ற கருவி, பொது அரசாங்கம் ஒன்றுதான். இதை விளங்கிக் கொள்வதற்கு ஜெர்மனியைத்தான் எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமென்பதில்லை. இந்திய நாடே இதை மெய்ப்பிப்பதற்கானதோர் சிறந்த எடுத்துக்காட்டு அல்லவா? இத்துணை வேறுபாடுகளும் பாகுபாடுகளும் நிறைந்த இந்தியாவில், ஒரே நாட்டினர் எனும் உணர்வு நிலவுகிறது எனில், பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கிய திலிருந்து இப்பரப்பு முழுவதும் ஒரே பொது ஆட்சியின் கீழ் இருப்பதுதான் காரணம் என்பதை ஏற்கத்தான் வேண்டும். எனவே வரலாற்று நோக்கிலும், காரண காரியவியல் நோக்கிலும், மக்கள் நிலைமைகள், அவற்றில் நிலவும் வேறுபாடுகள் இந்தியா தன்னாட்சி பெறுவதற்குத் தடையாக இருப்பதாக எவரும் கருதவியலாது என்றே எனக்குத் தோன்றுகிறது. சொல்லப் போனால், இந்தியா ஒன்றுபட்ட நாடாக வேண்டும் என்பதே நமது குறிக்கோள் எனில், அதை அடைவதற்குரிய வலிமை வாய்ந்த கருவி தன்னாட்சி அரசே என்பதைத் துணிந்து கூறுவேன்.

5. மக்களிடையேயும், நிலைமைகளிடையயும் காணப்படும் வேறுபாடுகளால் எந்தப் பின்னடைவுகளும் கிடையாதா என்று நீங்கள் கேட்பீர்கள் என்பதில் அய்யமில்லை. தன்னாட்சி கொண்ட இந்தியாவுக்கான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் போது, இவற்றை எல்லாம் நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தேவையில்லையா? எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று சிறிதும் தயக்கமின்றிக் கூறுவேன். மக்களிடையிலும், நிலைமைகளிலும் இந்த வேறுபாடுகளையெல்லாம் புறக்கணித்து விட்டு, தன்னாட்சி இந்தியாவுக்கு வரம்புகளோ, கட்டுப்பாடுகளோ ஏதும் இல்லாத அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று கூறுவது, இன்றைய சராசரி காங்கிரஸ் அரசியல்வாதிகளின் போக்காக இருக்கிறது.

நாட்டின் சமூக நிலைமைகளைக் கருத்தில் கொள்ளாமல் உருவாக்கப்படும் அரசமைப்புச் சட்டத்தின் கீழ், அரசியல் அதிகார மய்யம் எவரிடம் இருக்கும் என்பதை படித்த பெருமக்களாகிய நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சிறுபான்மை இன மக்களிடையே அது இருக்குமென்றா எண்ணுகிறீர்கள்? இந்திய சமூகத்தின் நடைமுறை நிலைமைகளைப் புறக்கணித்துவிட்டு அமைக்கப்படும் தன்னாட்சி அரசாங்கத்தில் அரசியல் அதிகாரத்தின் பிடிகள், அனைத்து வசதியும் பெற்று கல்வியில் சிறந்து விளங்கும் முன்னணி சாதிகளைச் சேர்ந்த மேல்தட்டு மக்களின் கைகளில்தான் போய்ச் சேரும் என்பதை நான் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். அதாவது, செல்வத்திலும், கல்வியிலும், சமூகத் தகுதியிலும், அரச போகத்திலும் திளைத்துக் கொண்டிருப்போர் கைகளில்தான் போய்ச் சேரும்.

அரசியலில் ஆகட்டும்; பிற துறைகளிலாகட்டும்; வல்லவர்களுக்கே வெற்றி என்பது தேற்றம். மேல்தட்டினருக்குக் கல்வியாலும் செல்வத்தாலும் பெற்ற வளங்கள் துணை நிற்கும். ஆனால் சிறுபான்மை மற்றும் நலிவடைந்த சமூக மக்கள், மேல்தட்டு மக்களின் இந்தவொரு வளத்திற்கு எதிராக மட்டுமே போராட வேண்டியிருக்குமென்று எண்ண வேண்டாம். செயல்பாட்டில் மிக நுட்பமான தாயினும் உண்மையான கூறு மற்றொன்று உண்டு. அதுதான் அவர்களது நிலைத்த சமூகப் பிடிப்பு.

இந்த உறுதியான பிடிப்பில் தகுதிக்கோ, திறமைக்கோ சற்றும் இடமில்லை. இந்திய மக்கள் உறவு மற்றும் குழுப்பற்று மிக்கவர்கள். தமது உறவோ, குழுவோ அல்லாத மனிதர்களிடையே பாரபட்ச உணர்வு காட்டி ஒதுக்கும் தன்மை மிகுந்தவர்கள். பெரும்பான்மைச் சமூக மக்களிடையே இந்தப் பாகுபாட்டுணர்வு ஆழமாக வேரூன்றி செயல்படும் நிலையில், சிறிய சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கு இது கடும் பின்னடைவாகவே விளங்கி, அரசியல் அதிகாரம் எதையும் அவர்களுக்கு எட்டாக் கனியாக்கிவிடும்.

இந்த மனப்பான்மையின் செயல்விளைவு, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெருந்தீங்காகவே முடியும். மத அடிப்படையில் அமைந்த இந்திய சாதி அமைப்பு, ஏணிப்படிகளைப் போன்று வரிசையான பல தர நிலைகளைக் கொண்டது என்பதையும், ஏணியின் படிகளில் மேலே இருப்பவர்களுக்கு மிகுந்த மதிப்பும், கீழ்நிலையில் இருப்பவர்களுக்கு இழிவும் காணப்படும் நிலையையும் நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள். இந்தப்படி நிலை அமைப்பு முறையின் விளைவாக கீழ் படியில் உள்ள மக்கள், தமக்கு மேல்படிகளில் உள்ளவர்கள் பால் மரியாதை செலுத்தி முன்னுரிமை அளிப் பதையும், கீழ் படிளில் உள்ளவர்களை இழிவுபடுத்தி புறக்கணிப்பதையும் வழக்கமாக்கி வைத்துள்ளது.

இத்தகைய உளவியல் செயல்பாடு, தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் அதிகாரத்தின் போராட்டத்திற்குப் பேரழிவாய் முடிந்து விடும். இந்த நிலையில் தீண்டத்தகாத மக்களுக்கு ஆதரவாக ஒற்றை வாக்குகூட அளிக்காமல், தீண்டப்படும் மக்களே தீண்டத்தகாத மக்களின் வாக்குகளில் பெரும் பகுதியைப் பெற்றுவிட முடியும். இவ்வாறாக, தீண்டத்தகாத மக்கள் தங்கள் போராட்டத்தில் தோல்வியைப் பெற நேர்வதுடன், தம்மையறியாமலே தமது எதிரிகளின் வெற்றிக்குத் துணை போகவும் நேரிடும். எனவே, நடைமுறை சமூக நிலைமைகளைப் புறக்கணிப்பதன் விளைவு - செல்வம், கல்வி, சமூக நிலை ஆகியவற்றால் மேம்பட்டு நிற்கும் மேல் சாதி மக்களிடம் அரசியல்



அதிகாரம் முழுவதையும் அளித்து, அவர்களை ஆளும் சாதியாக ஏற்பதுதான் என்றால், நமது குறிக்கோளுக்கு ஏற்ற வழிமுறைகள் அனைத்தையும் பயன்படுத்தி அதைத் தடுப்பதே நமது கடமையாகும்.

நமக்கு மேல் ஆட்சி செய்பவர்கள் மாறுவது மட்டுமே நமக்கொன்றும் நிறைவு தந்துவிடாது. பிறிதொரு நாட்டை ஆளும் தகுதி எந்தவொரு நாட்டுக்கும் கிடையாது என்ற கருத்தில் காங்கிரசாருடன் நான் ஒன்று படுகிறேன். ஆனால் அதோடு நின்றுவிடாமல்; அதே நியாயத்தை மேலும் விரித்து, பிறிதொரு வகுப்பை ஆளும் தகுதி எந்தவொரு வகுப்புக்கும் கிடையாது எனும் கருத்தை அவர் களிடம் அடித்துக் கூறுவதில் தயக்கம் தேவையில்லை.

அய்ரோப்பிய அதிகார வர்க்கம், இந்திய ஆளும் சாதியினர் எனும் இரு தரப்பினரையும் ஒப்பிட்டால் செல்வம், கல்வி, உயர் சமூகத் தகுதி ஆகியவற்றின் மேம்பாட்டால் பெற்ற வலிமையின் விளைவுகளைத்தான் இங்கு குறிப்பிடுகிறேன். இந்த இரு பிரிவினரில் இந்தியப் பொது மக்களை யார் நன்கு ஆள முடியும் என்ற கேள்விக்கு, நாட்டு மக்களின் வாழ்க்கையும் அவர்களது நிலைகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, சிந்தனைப் போக்கு, அவர்களது தேவைகள், முறையீடுகள் ஆகியவற்றை நன்கறிந்தவர்கள் என்ற முறையிலும், மக்கள் என்ன சிந்திக்கிறார்கள், எதை விரும்பு கிறார்கள், எதில் அக்கறை கொள்கிறார்கள் என்பன வற்றை அறிய வல்லவர்கள் என்ற முறையிலும், தாங்களே இந்திய அரசுப் பொறுப்பை மேற் கொள்ள அதிக தகுதியுடயவர்கள் என்று இந்திய மேல்தட்டு சாதியினர் உரிமை கொண்டாடு கின்றனர்.

அவர்கள் கூற்று உண்மையாயிருக்கலாம். ஆனால் அம்மேல் தட்டு சாதியினர், தம்மீது சுமத்தப்படும் வகுப்புப் பாரபட்சம், குழுப்பற்று, தமது உற்றார் உறவினர்களுக்கே நன்மை செய்யும் மனப்பான்மை ஆகிய குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்துவிட முடியாது. பெரும்பாலான மக்களின் எதிர்காலத்தை முடிவு செய்யும் அதிகாரங்களைப் பெறுவதற்கு அவர்கள் முற்றிலும் தகுதியற்றவர்கள் என்பதை இக்குற்றச்சாட்டுகள் உணர்த்துகின்றன. இன்னும் ஒருபடி மேலே சென்று, பெரும்பாலான ஏழை எளிய மக்களுக்கும் இந்த உயர் வகுப்பினருக்கு மிடையே நிலவும் பெருத்த இடைவெளி காரணமாக, எளிய மக்களின் தேவைகள், உணர்வுகள், விளைவுகள், குறிக்கோள்கள் ஆகிய வற்றை இவர்கள் அறியவும் இயலாதவர்கள் என்றும் கூறலாம். அதற்கும் மேலாக அவ்வெளிய மக்களின் எதிர் காலக் கனவுகளுக்கு இவர்கள் பகையாகவே விளங்குவர் என்பதும் உண்மை.

இதை நான் வலியுறுத்தி ஆணித்தரமாகக் கூறுவதற்கு மற்றொரு அடிப்படைக் காரணம், மக்களாட்சியின் ஆணிவேர்க் கருத்தான சமத்து வத்தை ஏற்காத வகுப்பினரின் பிடியில் இந்தியத் தன்னாட்சி அரசை நம்பி ஒப்படைக்க முடியாது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகப் பாகுபாட்டு உணர்வில் ஊறித் திளைத்துத் தாமே உயர்ந்தவர்கள் என்று வாழும் இவர்களிடம், எளிய பொதுமக்களின் வாழ்க்கை நலன்கள் பாதுகாப்பாக இருக்கிறது. ஒவ்வொரு தனித்தனி மனிதரின் மதிப்பையும் தனியே உணர்ந்து மதித்தல், ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு வாழ்க்கைதான் உண்டு என்பதை உணர்ந்து, அவ்வாழ்க்கையில் அவர் தனது தகுதிகளுக்கேற்ப உச்ச கட்ட உயர்வை அடைய, அனைத்து வாய்ப்பு களையும் அளித்தல் ஆகிய வையே நிகழ்கால மக்களாட்சி அரசின் கோட்பாடு களாகும். இந்திய மேல்தட்டு வகுப்பு மக்களின் சிந்தையிலோ, செயல்களிலோ, மெய்ப் பொருளியலிலோ இவ்வடிப்படைக் கோட்பாடுகள் கிஞ்சித்தும் இடம் பெறவில்லை.

மாறாக, இக்கோட்பாடுகளுக்கு முரண்பட்ட வகையில், ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள பல்வேறு பிரிவுகளில் ஒரு கட்டமே இப்போதைய பிறவி என்றும், இப்பிறவியில் பெற்றிருக்கும் உயர்வு, தாழ்வுகள், முற்பிறவியில் செய்த வினைகளின் விளைவே என்றும், இப்பிறவியில் எத்தகைய தகுதி, திறமை, பண்புகள் கொண்டிருந்தாலும் முற்பிறவியின் வினையால் கிடைக்கப் பெற்ற சமூகப் படிநிலைபடுத்தப்பட்ட நிலையில் எவ்வித மாற்றமும் அடைந்துவிட முடியாதென்றும் அவர்கள் கூறிவரும் மூடப் பழக்கங் களுக்கும் மக்களாட்சியின் அடிப்படைகளுக்கும் தொடர்பு ஏதுமில்லை. அவர்கள் கருத்துப்படி பார்ப்பனராகப் பிறந்தவர் பார்ப்பனராகவே இருப்பார்; பறையராகப் பிறந்தவர் தொடர்ந்து பறையராகவே இருப்பார் என்பது வெற்றுப் பேச்சன்று, நடைமுறை செயல்பாட்டிலிருக்கும் நம்பிக்கை. இத்தகைய மனப் பான்மை உள்ளவர்களிடம் அரசியல் அதிகாரத்தை கொடுத்தால், கொலைகாரன் கையில் நாமே வாளையெடுத்துக் கொடுப்பதற்கு ஒப்பாகும்.

*அனைத்திந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மாநாட்டில் (நாக்பூர்) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் 08.08.1930 அன்று ஆற்றிய தலைமை உரை :*

(நன்றி : தலித் முரசு ஏப்ரல் 2009)




# அம்பேத்கரைக் கொலை செய்ய முயன்ற ஆர்.எஸ்.எஸ்!

**அம்பேத்கரின் கொடும்பாவியைக் கொளுத்திய ஆர்.எஸ்.எஸ்**

1948 ல் அம்பேத்கர் இந்துச் சட்ட மசோதாவைத் தயாரித்து அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்தார். அதில் பெண்களுக்குச் சொத்துரிமை, விவாகரத்து உரிமை, மறுமண உரிமை, ஜாதி மறுப்புத் திருமணத்திற்கு அங்கீகாரம் என பல பெண்விடுதலைக் கூறுகள் இருந்தன.

எனவே இந்த இந்துச்சட்ட மசோதவை நிறைவேற்ற விடாமல் செய்ய, ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் சங்கராச்சாரியும், சாமியார்களும் மிகத்தீவிரமாகப் போராடினார்கள்.

1949 ல் டிசம்பர் 11 ல் புதுடில்லி ராம்லீலா மைதானத்தில் ஆர்.எஸ்.எஸ் ஒரு கண்டனப் பொதுக் கூட்டத்தை நடத்தியது. டிசம்பர் 12 ல் ராம்லீலா மைதானத்திலிருந்து நாடாளுமன்றம் நோக்கிப் பேரணியாகப் புறப்பட்ட ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் தோழர் அம்பேத்கர், பிரதமர் நேரு ஆகியோரின் கொடும்பாவி களை எரித்தனர்.

எங்கேயும், எப்போதும் பொதுக்கூட்டங்களே நடத்தாத ஆர்.எஸ்.எஸ் அமைப்பு அம்பேத்கரையும், அவர் கொண்டுவந்த இந்து சட்ட மசோதைவையும் எதிர்த்து, 1949 மார்ச்சிலிருந்து 1949 டிசம்பருக்குக்குள் புதுடில்லியில் மட்டும் 79 கண்டனப் பொதுக் கூட்டங்களை நடத்தியது.

இந்து மதவெறியர்களின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சி பிரதமர் நேரு இந்து சட்ட மசோதாவை நிறைவேற்றவே இல்லை. அதனால் தான் தோழர் அம்பேத்கரும் சட்ட அமைச்சர் பதவியைத் தூக்கிஎறிந்துவிட்டு வெளியேறினார்.

Source: Ramachandra Guha, The Hindu, 18.07.2004

**அம்பேத்கரை எதிர்த்த ஆர்.எஸ்.எஸ் தலைவர் சவார்க்கர்**

“இந்து மதத்தின் மீது வன்மம் கொண்டு ஒவ்வொரு நாளும் அம்பேத்கர் இந்து மதத்தின் மீது வசைமாறி பொழிகிறார். அவர் புத்தரைப் பகுத்தறிவுவாதி என்கிறார். பௌத்தம் அப்பழுக்கில் லாத சிறந்த மதம் என்கிறார். இந்து மதத்தின் மூடநம்பிக்கை களைக் கண்டிக்கும் இவர் இஸ்லாத்தில் உள்ள, கிருத்துவத்தில் உள்ள மூடநம்பிக்கைகளையும் கண்டிக்க வேண்டும். இஸ்லாத் திலும், கிருத்துவத்திலும் அடிமைகள் வைத்திருப்பது அங்கீகரிக் கப்பட்டுள்ளது. அதையெல்லாம், கண்டிக்க அவரது நாக்குக்கோ, பேனாவுக்கோ கண்டிப்பாகத் துணிச்சல் இராது. காரணம் அச்சம்தான்.” – 1956, சாவர்க்கர் தொகுப்புகள்

**அம்பேத்கரைக் கொலை செய்ய முயன்ற ஆர்.எஸ்.எஸ்**

அம்பேத்கரின் நெருங்கிய நண்பரும் இந்தியக் குடியரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பெல்காமைச் சார்ந்த டி.ஏ. காட்டி D.A,Katti ஒரு திடுக்கிடும் தகவலை வெளியிட்டிருக்கிறார். 02.02.1980 ல் பெங்களூர் அம்பேத்கர் கல்லூரியில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் அவர் பேசியதாவது,

“வீர சவர்க்கரின் தம்பி பாபா சவர்க்கார் நாசிக் பீட ஜகத் குருவிடம், தமக்கு 500 ரூபாய் பணம் தர வேண்டும் என்று கேட்டார். அந்தப் பணம் அம்பேத்கரின் சமையல்காரருக்கு லஞ்சமாகத்தர கேட்க்கப்பட்ட பணம்! அதாவது அம்பேத்கர் உணவில் விஷம் கலந்து கொடுத்து, சாகடிக்க அவரது சமையல் காரரிடம் ரூ.500 லஞ்சம் கொடுக்க பாபா சவர்க்கார் ஏற்பாடு களைச் செய்திருந்தார். ஆனால், சங்கராச்சாரி இதற்கு பணம் தர மறுத்துவிட்டார். இத்தகவலை பிரபல மராத்திய எழுத்தாளர் நாடக ஆசிரியரான பி.கே. அட்ரே ஞ.மு.ஹவசந அவர் நடத்திய ‘மராத்தா’ என்ற மராத்திய நாளிதழில் வெளியிட்டார்.

காந்தியார் கொலையில் குற்றம் சாட்டப்பட்டிருந்த வீர சவார்க்காரின் தம்பி, பாபா சவார்க்கார் ஆர்.எஸ்.எஸ் சைத் தொடங்கிய ஐவர் குழுவில் ஒருவரான சித்பவன் பார்ப்பனர் ஆவார்.

தலித் வாய்ஸ் ஏடு, 16.04.1982

இவ்வாறு அம்பேத்கரின் கொடும்பாவியை எரித்து, அவரை சட்ட அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றி, அவரைக் கொலை செய்யவும் முயன்றவர்கள் தான் இன்று அம்பேத்கரை ஆர்.எஸ்.எஸ் ஆதரவாளர் என்று மோடிவித்தை காட்டி வருகிறார்கள்.

– காட்டாறு வெளியிட்டுள்ள ‘ஆர்.எஸ்.எஸ் ஸால் ஆபத்து’ நூலில் இருந்து

வழக்கமாக, நாம் மட்டுமே ஒன்றுகூடினோம். கொண்டாடினோம். மதுரை விழா, தோழர் பாபுகண்ணன், நிர்மலா ஆகியோரின் இரத்த உறவுகளும், கொள்கை உறவுகளும் இணையான அளவில் பங்கேற்று இரண்டு தரப்பும் அவரவர் விரும்பிய கலைவடிவங்களை நிகழ்த்தி ஒரு மாறுபட்ட – கலவை யான நிகழ்வாக நடந்தது. காலையில் இரத்த உறவுகள், நாதசுரம், தவில், கரகாட்டம், பொய்க்கால்குதிரை ஆகியவற்றை நடத்தினர். பகல் 12 மணிக்கு மதுரை சென்று சேர்ந்த தோழர்களுக்கு, மகிழ் இல்லத்தார் சிறப்பான வரவேற்பைக் கொடுத்தனர். மதுரை ஊமச்சிகுளம் பேருந்து நிலையத்திலிருந்து வீடு வரை பறை அடித்து, பறை நடனத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இல்லத்தின் முகப்பில், பெரியார் முகமூடி அணிந்து வரவேற்பளித்தனர்.

இல்லத்திறப்பு நிகழ்வாக, திராவிடர் பண்பாட்டு உறுதிமொழி ஏற்கப்பட்டது. தோழர் மகிழ் உறுதிமொழியை முன்மொழிய, கருந்திணைக்குடும்பத்தினர் எழுந்துநின்று உறுதிமொழியை ஏற்றனர். தொடர்ந்து, பாபுகண்ணன், நிர்மலா ஆகியோரின் பெற்றோர், உடன்பிறந்தோர் அவரவர் பாடல்களைப் பாடுவது, நடனமாடுவது என கலைநிகழ்ச்சிகள் நடந்தன. எம்.ஆர்.இராதா கலைக்குழு வினரின் வீதிநாடகம், பெரியார் நம்பியின் மந்திரமா தந்திரமா? ஆகிய நிகழ்ச்சிகளை நமது தோழர்கள் சிறப்பாக நடத்தினர்.

நமது நிகழ்ச்சிகளை இதுவரை பார்த்திராத, இரத்த உறவுகள், நண்பர்களிடமிருந்தும் நமது கலை வடிவங்களுக்கு பலமான வரவேற்புக் கிடைத்தது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிகழ்வுகள் மாறி மாறி நடந்தாலும், ஒருவருக்கொருவர் மற்றவர்களின் கருத்துக்களை பக்குவமுடன் ஏற்று விழாவுக்குப் பெருமை சேர்த்தனர்.

நாம் மட்டுமே ஒன்றுகூடுவதைவிட இதுபோன்று நமது இல்லவிழாக்களில் நமது இரத்த உறவு களையும், கொள்கை உறவுகளையும் ஒன்று சேர அழைத்துக் கொண்டாடுவது இருதரப்பின் உறவுகளை மேம்படுத்தும். சராசரி மக்களுக்கு, ஜாதி கடந்த உறவுகளைப் பற்றிய ஒரு புரிதலை உண்டாக்கும்.

இல்லத்திறப்புவிழா என்றாலே, வழக்கமான இந்துச் சமுதாயம், பார்ப்பனர்களை அழைத்து ஹோமம் வளர்ப்பதையும், பசுமாட்டை வீட்டுக்குள் அழைத்துச்சென்று



சிறுநீர் கழிக்க வைத்து, அதை வீட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தெளிப்பது என்பது போன்ற மதச்சடங்குகளைப் பார்த்திருப்போம். தோழர் பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியின் விழைவாக, பார்ப்பனர்களுக்கும், மாடுகளுக்கும் கொடுக்கப்பட்ட முதல் மரியாதை நிறுத்தப்பட்டது. நமது சுயமரியாதை காக்கப்பட்டது. ஆனால் பொதுக்கூட்டம் நடத்து வதைப்போல, நாமும் மைக்கைப் பிடித்து மணிக்கணக்கில் பேசி விழாவிற்கு வந்திருக்கும் அனைவரையும் களைப் படையச் செய்துகொண்டே இருக்கிறோம்.

மகிழ் இல்லத் திறப்பு விழா முற்றிலும் புதிதாக இருந்தது. பார்ப்பனர்களுக்கும், மாடுகளுக்கும் கொடுக்கப் பட்ட மரியாதைகள், நிர்மலா – பாபு இணையரின் குடும்பத் தினருக்கும், கருந்திணை உறவுகளுக்கும் வழங்கப்பட்டன. ஆடல், பாடல், கொண்டாட்டமாக கருத்துக்கள் விவாதிக்கப் பட்டன. இருதரப்பு உறவுகளும், நண்பர்களும் கடந்த காலங்களை அசைபோடும் வகையில் நெகிழ்வான சில நிகழ்வுகளும் நடந்தன. கருந்திணைத் தோழர்கள் திருப்பூர், பல்லடம் பகுதிகளிலிருந்து இரண்டு பேருந்துகளிலும், மற்ற பகுதிகளிலிருந்து தனி வாகனங்களிலும் என 200 பேர் பங்கேற்றனர்.



# பெரியாரியலைப் பரப்பும் புதிய ஆயுதங்கள்




**திராவிடர் விடுதலைக்கழகத்தின்**
**அதிகாரப்பூர்வமான மாத இதழ்**
95, டாக்டர் நடேசன் சாலை,
அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர்,சென்னை - 600004




**திராவிடர் கழக மாணவரணித் தோழர்**
**மு.சி.அறிவழகன் நடத்தும் மாத இதழ்**
2 / 343 காமலாபுரம், மல்லிக்குட்டை (அ), காரிமங்கலம் (வ)
தருமபுரி மாவட்டம்- 635205 kaithadimonthly@gmail.com




ஒரு மனிதன் மற்றொரு மனிதனை அசுத்தமான வனாக, தீண்டத்தகாதவனாகப் பார்க்கும் பார்வையைக் கற்றுக்கொடுக்கும் இந்து மதத்திற்குள் இருக்கும் வரைக்கும் - ஜாதியின் பெயரால் நம் சிந்தையில் ஆழப்பதிக்கப் பட்டிருக்கும் - 'பாகுபாடு' என்ற கருத்தாக்கம் எப்போதும் ஒழியாது. தீண்டத்தகாதோருக் கிடையில் நிலவும் ஜாதியும், தீண்டாமையும் அழித்து ஒழிக்கப்படவேணடுமானால் மதமாற்றம் ஒன்றுதான் மருந்து...

-தோழர் அம்பேத்கர்,
(நான் ஓர் இந்துவாகச் சாகமாட்டேன்)

காட்டாறு


Owner and Publisher by : S.Vijayaragavan 99762 56821
Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com